# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை



ஆ.மு.சி.வேலழகன்



ஆசிரிய சிரோமணி

திரு.த.செல்வநாயகம்

50/=







கொழும்புத் தமிழ்ச் சங்கம்

"இலட்சியம் இல்லாமல்
இலக்கியம் இல்லை"

# செங்கதிர்

**8**

ஆவணி 2008 (தி.வ ஆண்டு 2039)


ஆசிரியர் : செங்கதிரோன்

**தொடர்பு முகவரி :**
திரு.த.கோபாலகிருஷ்ணன்
இல.19, மேல்மாடித்தெரு.
மட்டக்களப்பு. இலங்கை.

**Contact :**
**Mr.T.Gopalakrishnan**
19,Upstair Road,
Batticaloa, Sri Lanka.

தொலைபேசி / Telephone
065 2223950
077 2602634

மின்னஞ்சல் / E-mail
senkathirgopal@gmail.com


ஆக்கங்களுக்கு
ஆக்கியோரே பொறுப்பு.

## ஆசிரியர் பக்கம்

'வாசிப்பே மனிதனை முழுமையாக்குகின்றது' என்பது பொன்மொழி. ஆனால் இன்று இளைய சமுதாயத்தில் வாசிப்புப் பழக்கம் அருகிப் போய்விட்டது அல்லது அற்றுப் போய்விட்டது. பரீட்சைப் பெறுபேறுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்ட தற்காலக் கல்வி முறையும், இலத்திரனியல் ஊடகங்களின் தாக்கங்களும், தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியும் கூட இதற்குக் காரணங்கள் என்பதை மறுப்பதற்கில்லை. எது எப்படியிருப்பினும் ஊன்றி வாசித்துக் கிரகித்துக் கொள்ளும் போது தான் ஒரு விடயம் மனதில் பதிகிறது. மூளைக்கும் அது நல்ல பயிற்சியாகிறது. மனிதன் பண்படுவதற்கு வாசிப்புப் பழக்கம் அவசியமானது. எனவே, நம்மவரிடையே புத்தகப் பண்பாட்டை வளர்த்தெடுப்பது முக்கியம். வீட்டிலே பூசை அறையொன்று எவ்வளவு முக்கியமோ அதேபோன்று புத்தக அறையொன்றையும் கட்டாயமாக அமைத்து, அங்கே நல்ல புத்தகங்களைச் சேமித்து வைக்கும் போது வீட்டிலுள்ள குழந்தைகள் அவற்றை எடுத்து வாசிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். பெரியவர்களும் இதனால் பயன்பெற முடியும். புத்தகப் பண்பாட்டை வளர்த்தெடுப்பதில் இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவை

ஆற்றிவரும் பங்களிப்பையும்; 'நூல் நயம் காண்போம்', 'படித்ததும் பிடித்ததும்' ஆகிய தொடர் நிகழ்ச்சிகளின் மூலம் வாசகர் பரப்பை அதிகரிப்பதற்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் சேவையையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தம். கிராமங்களிலே செயற்படும் கலை, இலக்கிய அமைப்புக்களும் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் தங்கள் வேலைத் திட்டத்தில் புத்தகப் பண்பாட்டு வளர்ச்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் 'செங்கதிர்' சேர்ந்து உழைக்கும்.

- செங்கதிரோன் -

**"செங்கதிர்" கட்டண விபரம் : (அஞ்சல் செலவு உட்பட)**

| | இலங்கை | இந்தியா | வெளிநாடு |
|---|---|---|---|
| அரையாண்டுக்கட்டணம் | 500/- | 250/- | US$ 10 |
| ஓராண்டுக் கட்டணம் | 1000/- | 500/- | US$ 20 |
| ஆயுள் கட்டணம் | 10,000/- | 5000/- | US$ 100 |
| புரவலர் கட்டணம் | 25,000/- | 12,500/- | US$ 250 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப்படும். புரவலர்களுக்கு வாழ்நாள் முழுவதும் "செங்கதிர்" வழங்கப் படுவதுடன் "செங்கதிர்" எதிர்காலத்தில் வெளியிடவுள்ள எல்லா நூல்களும் இலவசமாக வழங்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | முழு | 5000 | 1500 | US$ 50 |
| | அரை | 3000 | 1000 | US$ 30 |
| முன் அட்டை உட்புறம் | முழு | 3000 | 1000 | US$ 30 |
| | அரை | 2000 | 750 | US$ 20 |
| பின் அட்டை உட்புறம் | முழு | 2000 | 750 | US$ 20 |
| | அரை | 1500 | 500 | US$ 15 |

**அன்பளிப்பு**

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு.

கணக்கு இல : 113100138588996 (நடைமுறைக்கணக்கு)

காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஷ்ணன் என்று பெயரிடுக. அல்லது பணமாக ஆசிரியரிடம் நேரிலும் வழங்கலாம்.



# அதிதிப்பக்கம்



'செங்கதிர் இதழின் இம்மாத அதிதி தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள *Harrow International College* இன் அதிபரும், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரும், கல்விமானுமாகிய எழுத்தாளர், விமர்சகர், ஜனாப்.அ.முகம்மது சமீம் அவர்களாவார்.

அகமதுபுன்னை - நாச்சியா உம்மா தம்பதிகளுக்கு 15.11.1932 அன்று பதுளையில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சங்கம் நடாத்திய பதுளை சரஸ்வதி வித்தியாலயத்திலும், அல் அதான் முஸ்லிம் பாடசாலையிலும் (தற்போது மகா வித்தியாலயம்) அதன் பிறகு ஆங்கில மொழிமூலக் கல்வியை பதுளை தாம்ஜதாதக் கல்லூரியிலும் பெற்று 1950 இல் எஸ்.எஸ்.சி பரீட்சையில் விசேட சித்தி பெற்று லண்டன் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்குத் தகுதி பெற்றார். இருப்பினும் புலமைப்பரிசில் பெற்று கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் எச்.எஸ்.சி கற்று 1953 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையை விசேட பாடமாகக் கொண்டு பட்டதாரியானார்.

பட்டதாரியானவுடன் தான்படித்த ஸாகிராக் கல்லூரியிலேயே உதவி அதிபராக நியமனம் பெற்றார். 1961 இல் தனியார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் *Inspector Of School* ஆக கல்வித்திணைக்களத்தில் சேர்ந்து முதலில் *Transfer Board* இல் உதவிச் செயலாளராகப் பணியாற்றி 1963 இல் *District Inspector Of School* ஆக அக்கரைப்பற்று, கண்டி, பண்டாரவளை, நுவரெலியா ஆகிய இடங்களில் கடமையாற்றிப் பின் கொழும்பில் *Acting Chief Education Officer* ஆகி 1969இல் மட்டக் களப்பிற்குக் கல்விப்பணிப்பாளராகச் சென்றார். அங்கு தமிழ்த்தின விழாக்கள், தமிழிசை விழா என்பவற்றை கல்வித்திணைக்களம் மூலம் விமரிசையாக நடாத்தினார். அக்காலத்தில் இலங்கையில் இருந்த நான்கு முதலாம்தர கல்விப் பணிப்பாளர்களுள் சமீம் அவர்களும் ஒருவராகத் திகழ்ந்தார். மட்டக்களப்பிலிருந்து கம்பளை ஸாகிராக் கல்லூரி அதிபராக மாற்றமாகி

வந்து பின் காலியில் கல்விப் பணிப்பாளராகவும் பின் கல்வியமைச்சில் எல்லா முஸ்லிம் பாடசாலைகளுக்கும் பொறுப்பான பிராந்தியப் பணிப்பாளராகப் ***(Range Director)*** பணிபுரிந்தார்.

1980 இல் ஓய்வு பெற்றபின் சவூதி அரேபியாவில் தனியார் பாடசாலையொன்றின் பணிப்பாளராகக் கடமையாற்றி அங்கு சவூதி மன்னர் மட்டத்திலும் அறியப்பட்டவராகிப் பின் 1990 இல் நாடு திரும்பி இன்றுவரை சர்வதேசப் பாடசாலையொன்றை நடாத்தி வருகிறார்.

சவூதி அரேபியாவில் ***World Muslim Association*** நடாத்திய சர்வதேச மாநாடு - தமிழ்நாடு சென்னையில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - இலங்கையில் நடைபெற்ற இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாடு ஆகியவற்றில் பங்கேற்றுப் பாராட்டும் பெற்றவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை, சதாசிவம் ஆகியோரின் மாணாக்கனாயும், கைலாசபதி, சிவத்தம்பி, புவியியல் பேராசிரியர் செல்வநாயகம் ஆகியோரின் சகமாணவனாகவும் பயின்றவர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களுள் ஒருவராகயிருந்து கைலாசபதி, சிவத்தம்பி, பிரேம்ஜி, சுபைர் இளங்கீரன், எச்.எம்.பி. முகைதீன், டொமினிக் ஜீவா ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

விமர்சனம், வரலாறு ஆகிய துறைகளிலேயே மிகுந்த ஈடுபாடு கொண்டவரெனினும் அவ்வப்போது சிறுகதைகளும் படைத்துள்ளார். 'வசந்தம்' சஞ்சிகையில் நனவோடை உத்தியைக் கையாண்டு இவர் எழுதிய 'ஒளி' எனும் சிறுகதை கைலாசபதியால் சிலாகித்துப் பேசப்பட்டதொன்று.

இதுவரை சுமார் பதினான்கு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய **'படைப்பாளிகளும் ஆய்வாளர்களும்'** என்ற நூலுக்கு வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய பரிசு வழங்கப்பட்டது. மேலும், இவர் எழுதி நான்கு பாகங்களாக வெளிவந்த **'ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினை'** என்ற நூலுக்கு இலங்கை சாகித்திய பரிசு கிடைத்தது.

இலங்கையின் கல்விமான்களுள் ஒருவராகிய ஜனாப் அ. முகம்மது சமீம் அவர்களை **'செங்கதிர்'** இதழின் இம்மாத அதிதியாக அறியத்தருவதில் செங்கதிர் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

– ஆசிரியர்.



# கைலாசபதியும் முற்போக்கு இலக்கிய இயக்கமும்

ஜனாப்.அ.முகம்மது சமீம்

**1) தமிழ் இலக்கியச் சிந்தனை மரபும் கைலாசபதியும்**

தமிழ் இலக்கியச் சிந்தனை மரபு என்றால் என்ன? இதற்குப் பல கோணங்களிலிருந்து பல கருத்துக்களைக் கூறலாம். தமிழ் இலக்கியம், இந்து மதத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கிறது. இதை நாம் இந்தியப் பண்பாடு என்றும் கூறலாம். இந்தியப் பண்பாடு, பல பண்பாட்டு அமைதிகளையும், பலதரப்பட்ட மக்களையும், அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் கொண்டது. இந்தியப் பண்பாட்டில் தோன்றிய இந்தியச் சிந்தனை பல மரபுகளைக் கொண்டது. ஆரியர் ஆதிக்கம் இந்தியாவில் தோன்றியபோது, ஆரியப் பண்பாடும் வளர்ந்தது. ஆரியப் பண்பாட்டினைத் தான் உபநிடதங்களும், வேத ஆகமங்களும் பிரதிபலிக்கின்றன. இதனை "பிராமணர் சிந்தனைகள்" என்றும் கூறலாம் என்பது ஒரு கூட்டத்தாரின் கருத்து.

ஆனால் இந்திய வரலாறு ஒரு சமயத்தை மட்டும் சார்ந்தது என்று கூறமுடியாது. இந்திய உபகண்டத்தில் பல அரசுகள், சாம்ராஜ்யங்கள் தோன்றின. வெளியிலிருந்து எத்தனையோ படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. இதில் இஸ்லாமியரின் படையெடுப்புக்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதனால் இஸ்லாமிய கருத்துக்களும், சிந்தனைகளும், இந்திய சிந்தனையோடு கலக்கின்றன. இந்தப் பரந்த சிந்தனையோட்டத்தில் இந்தியாவின் பலதரப்பட்ட சாதனைகளைக் காண்கிறோம். இந்தச் சாதனைகள் சார்ந்த பல்லாயிரம் அனுபவங்களை உள்ளடக்கிய பார்வைகளாகவே இந்தியச் சிந்தனை மரபை நாம் காண முடியும்.

இந்தியப் பண்பாட்டின் பின்னணியில் வைத்துத்தான் தமிழ் நாட்டின் பண்பாட்டையும், தமிழ் இலக்கியச் சிந்தனையையும் நாம் அணுக வேண்டும். ஆரியப் பண்பாட்டுக்கு நேர்மாறானதாகத் திராவிடப் பண்பாடு அமைந்திருந்தாலும், அடிப்படையில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம்.

"மரபு" என்று சிலர் கூறுவதை நாம் கூர்ந்து அவதானித்தால், இவை பண்பாடு சிந்தனை என்ற அடிப்படையில் தோன்றியது என்பதை நாம் உணரலாம். இச் சிந்தனை வளர்ச்சியை சமுதாய இயக்கங்களோடு பொருத்திப் பார்க்க வேண்டும். இவை ஒவ்வொன்றும் சமுதாய வரலாற்றில் எந்நிலையில் தோன்றியது, வரலாற்றை ஒட்டி எவ்வாறு வளர்ச்சி பெற்றது, வளர்ச்சி பெற்ற பின் சமுதாய மாற்றப் போக்குகள் இவற்றை எவ்வாறு பாதித்தன என்பதை நாம் அறிந்துகொண்டால் தான் இக் கொள்கைகளைத் தவறில்லாமல் நாம் அளவுகோள்களாக இலக்கியப் படைப்புக்களை மதிப்பிடப் பயன்படுத்த முடியும்.

தமிழ் இலக்கியப் போக்கைச் சமுதாய வளர்ச்சியின் பின்னணியில் வைத்துத்தான் பேராசிரியர் கைலாசபதியும் பார்க்கிறார். ஒவ்வொரு காலகட்டத்தையும் பிரதிபலிப்பனவாகத்தான் அந்த காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்களும் அமைகின்றன. சமூக மாற்றங்களுக்குப் பொருளாதார மாற்றங்களே காரணம் என்ற மார்க்சியக் கோட்பாட்டைக் கடைப்பிடித்த கைலாசபதியும் இக் கண்ணோட்டத்தில் தன்னுடைய இலக்கியப் பார்வையைச் செலுத்தினார். இப் பொருளாதார மாற்றங்களுக்கு அச் சமூகத்தின் உற்பத்திச் சாதனங்களில் ஏற்படும் மாற்றம் தான் காரணம். இவ்வுற்பத்திச் சாதனங்களின் மாற்றத்தின் விளைவாக சமூக உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன. வர்க்கப் பேதங்கள் தலையெடுக்கத் தோன்றுகின்றன. இவ் வர்க்கங்களின் பிரதிபலிப்பாகவே அமைகின்றன இலக்கியங்கள்.

கைலாசபதி தேசிய இலக்கியம், மண் வாசனை என்ற கருத்துக்களை முன் வைத்ததோடு, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட உழைக்கும் வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக இலக்கியம் பயன்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

### 2) தமிழ் இலக்கிய வரலாற்றில் கைலாசபதி

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்தவர்கள் பல்கோணங்களிலிருந்து ஆராய்ந்தார்கள். இவர்கள் காலத்தை வைத்தே இப்பாடல்களைக் கணித்தார்கள். சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம், சங்ககாலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என்று காலத்தை வைத்துக் கணித்தார்கள். வேறு சிலர் தமிழிலக்கியப் பரப்பை இயற்கை நெறிக்காலம், அறநெறிக்காலம், சமயநெறிக்காலம் என பண்பாட்டுக் கருத்தியலின் அடிப்படையில் வகைப்படுத்தினார்கள். மக்களின் பொருளாதார சமூக சூழ்நிலையில்



இருந்துதான் சம்பவங்கள் தோன்றுகின்றன என்ற மார்க்சியத் தத்துவத்தைத் தன்னுடைய இலக்கியப் பார்வையில் முன்வைத்தார் கைலாசபதி. தொன்மையான இனக்குழு, பழம்பொதுமைச் சமூகம், அடிமைச் சமூகம், நிலவுடைமைச் சமூகம், முதலாளித்துவச் சமூகம் என்று வகுத்தார்.

இந்தப் பார்வையில் தான் "வீரயுகப் பாடல்கள்" என்ற தனது கலாநிதிப் பட்டத்தைப் பெறுவதற்கான ஆராய்ச்சிகளை நடத்தினார். இவ்வாய்வில் கைலாசபதி சில முக்கிய கருத்துக்களை முன்வைத்தார்.

(i) எந்தவொரு காலகட்டத்திலும் தோன்றும் இலக்கியங்கள் அவ்வவ் காலத்திய மக்களின் பொருளாதார சமூக சூழ்நிலையைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. இவ்விலக்கியங்கள் மூலம் சமூக மாற்றங்களை நாம் காணலாம். இப்பாடல்களைப் பார்த்து வெறும் ரசனையில் ஈடுபட்டிருந்த இலக்கியத் திறனாய்வாளருக்கு, கைலாசபதியின் கருத்து ஒரு புதிய பாதையைக் காட்டியது.

(ii) வரலாற்றில் ஏற்படும் எந்தவொரு சம்பவமும் மக்களின் பொருளாதாரச் சமூக வாழ்க்கையில் ஏற்படும் கொந்தளிப்பின் பிரதிபலிப்பே என்ற மார்க்சியக் கருத்தை நிலைநாட்டினார்.

(iii) ஒரு சமூகத்தில் இருக்கும் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் அச்சமூகத்தின் அமைப்பையும், சூழ்நிலையையும் பொறுத்தது.

(iv) மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுதான் இலக்கியங்கள்.

(v) தமிழர் வரலாற்றில் "வீரயுகம்" ஆரம்ப கால சமுதாயத்தைப் பிரதிபலிக்கிறது. அன்றைய தமிழ்ச் சமூகம் குலமரபுக் குழுக்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. இக்குழுக்கள் கூட்டு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தன. மருத நில மக்களின் உற்பத்திப் பெருக்கத்தினால், தோன்றிய சமுதாய மாற்றங்களும், அரசியல் மாற்றங்களும், வணிக சமுதாயத்தின் எழுச்சியும், பண்டைய மக்களின் வாழ்க்கையைப் பாதித்தது. புதிய இலக்கியங்கள் தோன்றின.

(vi) வீரயுகத்தின் ஆரம்பகாலப் பாடல்களான வாய்மொழிப் பாடல்கள் மறைந்து, வணிக சமுதாயத்தின் மேன்மையைப்

பறைசாற்றும் "சிலப்பதிகாரம்" போன்ற காவியங்கள் தோன்றலாயின. சிறுதெய்வ வணக்க வழிபாடும் இவ்விலக்கியங்களில் தொனித்தது. "மணிமேகலை" போன்ற காவியங்கள் தோன்றின.

(vii) வணிக சமுதாயத்தின் எழுச்சி, "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று" என்று ஆட்சியாளருக்கு மறைமுகமாக எச்சரித்தது. வணிக சமுதாயம் ஊழ்வினைக் கருத்தை மக்கள் மத்தியில் புகுத்தியதன் மூலம் வர்க்க வேறுபாட்டை வளர்த்தது.

கைலாசபதியின் இக்கருத்துக்கள், அவருக்குப் பிறகு வந்த ஆய்வாளர்களினதும் விமர்சகர்களினதும் எழுத்துக்களில் செல்வாக்குப் பெற்றதைக் காண முடியும்.

## முற்போக்கு இலக்கிய இயக்கமும் கைலாசபதியும்

கைலாசபதி சர்வகலாசாலையில் இருக்கும்போதே, முற்போக்கு இயக்கத்தில் தன்னை சம்பந்தப்படுத்திக் கொண்டார். இரண்டாவது உலகமகா யுத்தம் முடிவடைந்து, மேற்கு ஜெர்மனியும் இத்தாலியும், கிழக்கே ஜப்பானும் தோற்கடிக்கப்பட்டு முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளான ஐக்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும், உலக நாடுகளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. அப்பொழுதுதான் சுரண்டப்பட்ட கீழைத்தேய நாடுகளுக்கும், ஏழைத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் விடிவெள்ளியாக விளங்கியது சோவியத் யூனியன். சோவியத் யூனியனின் மார்க்சியக் கருத்துக்கள், உலகமெங்கும் உள்ள தாழ்த்தப்பட்ட வர்க்கத்திடையே பரவியது. ஒன்றன்பின் ஒன்றாக கீழைத்தேய நாடுகள், சுதந்திர நாடுகளாக மாறின. இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, பர்மா, சீனா, இலங்கை ஆகிய நாடுகளில், சுதந்திரக் கொடி வீசியது. சீனாவைத் தவிர ஏனைய நாடுகளில், ஏகாதிபத்திய நாடுகளுக்குச் சேவகம் செய்த வர்க்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. ஆனால் 1956 ஆம் ஆண்டு இலங்கையில் ஒரு பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. தொழிலாள வர்க்கத்தின் உதவியுடன், தேசிய மத்தியதர வர்க்கத்தினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இடதுசாரிக் கொள்கைகளை அரசாங்கம் ஆதரித்தது. இடதுசாரிக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவியது. இலக்கியத்திலும் இது செல்வாக்குப் பெற்றது. இக்காலகட்டத்தில் தான் கைலாசபதியும், ஒரு பட்டதாரியாக சமூகத்தில் காலடி வைக்கிறார். இடதுசாரி இயக்கங்கள் தோன்றின. இதில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஒன்று. இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்களை இவ்



இயக்கம் ஆதரித்தது. மக்களுக்காக இலக்கியம் படைத்தார்கள் இவ் எழுத்தாளர்கள். "மரபு" என்று சொல்லிக் கொண்டு வர்க்க வேறுபாடுகளை வளர்க்க முயன்ற பழமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற பிற்போக்குச் சக்திகளை முறியடித்து, இலக்கியத்தில் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தினர் முற்போக்கு எழுத்தாளர். இவர்களின் தத்துவ மேதையாக விளங்கினார் கைலாசபதி. கைலாசபதி சர்வகலாசாலையில் விரிவுரையாளராகப் பதவியேற்றபின், சர்வகலாசாலை மாணவர் மத்தியிலும், முற்போக்குக் கருத்துக்களையும் எண்ணங்களையும் பரப்பினார்.

இந்நிலை எழுபதுகள் வரையிலும் நீடித்தது. 70க்குப் பிறகு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும், பொருளாதார மாற்றங்களும், இலக்கியத்தையும் வெகுவாகப் பாதித்தது. உலக முதலாளித்துவம் தலைவிரித்தாடத் தொடங்கியது. சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், பின்னர் கம்யூனிஸ்ட் சீனாவும், ஒன்றன்பின் ஒன்றாக உலக முதலாளித்துவப் பிடியில் சிக்கின. பொருளாதாரத்தில் தாராள மயமாதல், உலக மயமாக்கல் (Globalisation) போன்ற கொள்கைகள் உலகமெங்கும் பரவியது. செல்வந்த நாடுகள் மேலும், மேலும் செல்வந்த நாடுகளாக வளர்ந்தன. ஏழை நாடுகள், ஏழ்மையாயின. வடக்கு, தெற்கு என்ற பிரிவினை தோன்றியது. உலக வங்கி போன்ற முதலாளித்துவப் பொருளாதார நிறுவனங்கள், கடனுதவி கொடுக்கும் போர்வையில், ஏழை நாடுகளை தம் பொருளாதாரப் பிடியில் வைத்து வதைத்தனர்.

இதைக் காரணமாக வைத்து, சில பிற்போக்குச் சக்திகள், முதலாளித்துவ, காலனித்துவ எஜமானர்களுக்கு அடிவருடிகளாக மாற்றமடைந்தன. உலக முதலாளித்துவத்தை அமெரிக்கா பிரதிபலித்தது. சாதி, சமய, இன வேறுபாடுகளை அது வளர்க்க முற்பட்டது. சுதந்திரத்திற்காகவும், இந்த எதேச்சதிகாரத்தை எதிர்த்தும் போராடுபவர்களை "பயங்கரவாதிகள்" என்று முத்திரை குத்தினர். "பயங்கரவாதத்தை" எதிர்க்கும் போர்வையில் நாடுகளைக் கைப்பற்றவும், அந்நாடுகளின் இயற்கை வளங்களைக் கைப்பற்றுவதிலும் இப்பொழுது முனைந்திருக்கின்றன. எண்ணெய் வளங்களுடைய நாடுகளான ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை நேரடியாகக் கைப்பற்றியது. அமெரிக்காவின் ஏகாதிபத்தியமும், அதன் முதலாளித்துவ கொள்கைகளும் பரவத் தொடங்கின. மார்க்சியத்தின் எதிரிகளுக்கு அதாவது, ஏற்றத்தாழ்வற்ற சுரண்டலுமற்ற ஓர் உலகையும் மனித சமுதாயத்தையும் உருவாக்க வேண்டும் என்ற கருத்தினை ஏற்க மறுத்த

எதிரிகளுக்குக் கொண்டாட்டமான காலமிது. பொதுவுடமைத் தத்துவத்திற்கு எதிரான வாசகங்களை எழுதுவதில் முனைப்பாய் இருக்கின்றனர்.

மார்க்சியம் மரணத்தைத் தழுவிவிட்டது.

பொதுவுடமைத்தத்துவம் காலாவதியாகிவிட்டது

சோஷலிசமும் சனநாயகமும் ஒன்றாயிருப்பது சாத்தியமில்லை என்று பறைசாற்ற முற்படுகின்றனர்.

மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என்று கூறுபவர்கள் கூட மார்க்சியத் தத்துவம் இன்னும் மக்கள் மத்தியில் பரவலாக இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஸ்டாலினிக்குப் பிறகு வந்தவர்கள், திரிபுவாதப் பாதையில் சார்ந்ததே இன்றைய நெருக்கடிகளுக்கான காரணம்.

ஆனால் ஒருண்மையை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். மார்க்சியம் உண்மையிலேயே காலாவதியாகிவிட்டால் நாம் அதுபற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்பதுதான் அது. காலத்தின் தேவையையொட்டியே எந்த ஒரு தீர்வும் உருவாகிறது. தேவை பூர்த்தி செய்யப்படும்போது அந்தத் தீர்வு அதன் பயன்பாட்டை இழக்கிறது. ஏனென்றால், அதன்பின் தோன்றுகின்ற புதிய பிரச்சினைகள் சகல அம்சங்களிலும் பழைய பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டிருப்பதால் பழைய தீர்வுகள் பயன்படாது போகிறது. இதனை மார்க்ஸ் தெளிவாக உணர்ந்திருந்தார். மார்க்சின் சிந்தனை முறையின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுவதே மார்க்சீயம் என்ற பொருள்பட மொழிந்தார் ஏங்கல்ஸ்.

''மார்க்சியம் செத்துவிட்டது'' என்று கூறுபவர்கள் கூட மார்க்சியம் முன்வைத்த அரசியல் பொருளாதாரத்தையோ மெய்யியல் கோட்பாடுகளையோ, சமூக உருவாக்கம் பற்றிய சிந்தனைகளையோ கொள்கையளவில் தவறு என்று நிறுவியதில்லை.

சமுதாயம் ஒவ்வொரு நாளும் மாறிக்கொண்டே வருகிறது. சமுதாயப் பிரச்சினைகள் மாறுகின்றன. உற்பத்திஸ்தாபனங்கள் மாறுகின்றன. மாறிவருகின்ற இச்சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இம் மாற்றங்களை எதிர்த்து நிற்பவர்களை, சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மாற்றாமல் அப்படியே நிலைநிறுத்தி வைப்பதில் ஆர்வம் காட்டுபவர்களை இன்றும் பிற்போக்குவாதிகளாகத்தான் கணிக்கிறோம். சமூக மாற்றத்திற்கேற்ப, இலக்கியங்களைப் படைப்பவர்களை நாம் இன்றும் முற்போக்குவாதிகளாகப் பார்க்கிறோம். இன்றைய



இலங்கையில் இருக்கும் முரண்பாடுகள் என்ன? இனவெறி; பெரும் நில வளத்தை உலகமுதலாளித்துவத்திற்கு அடகு வைப்பதில் இலங்கை முதலாளித்துவம் முனைந்திருக்கிறது. பெரும்பான்மைச் சர்வாதிகாரம் சிறுபான்மை மக்களை அடக்கியாள முற்படுகிறது. இதை எதிர்த்து ஏற்றத்தாழ்வு இல்லாத இனவெறி இல்லாத ஒடுக்குமுறை இல்லாத ஒரு சமாதான சூழலை உருவாக்குவதுதான் இன்றைய முற்போக்குவாதிகளின் கடமையாகும். இதைத்தான் இன்று இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை செய்து வருகின்றது. ■

# புல்வாழ்வும் போதனையும்

■ முன்னவ ளுக்கும் பிள்ளை
மூன்றுக்கும் பணத்தைக் கட்டிப்
பின்னவள் தன் பிஞ்சோடு
பெயர்கிறாள் நீதி மன்றில்
அன்னவர் தமது நாதன்
அவர்பணி முடித்த தாகத்
தன்னுடைப் பெருமை பீற்றித்
தத்துவம் புகலு கின்றார்.

■ கட்டிய தாலி தன்னைக்
கழற்றிடத் தீர்ப்பு வாங்கி
மற்றொரு பந்தங் கூடி
மகிழ்கிறார் சிலர், மற்றோரோ
உற்றதம் கிளி ஏமாற்றி
ஊரிலே குரங்கு காவிப்
பத்தரை மாற்றுப் பொன்போல்
பகட்டுருத் தரிக்கின் றார்கள்.

■ தெருவெலாம் திரிந்து பெற்ற
தேட்டத்தைத் திரட்டி வந்து
அருமையாய்ப் பிசைந்து தின்று
அன்போடு துயின் றெழுந்து
ஒருவருக் கொன்றென் றிட்டால்
இருவரும் சுமந்து வாழும்
பெரியரீர்! இவர் உம்பிச்சை
பெறுதற்கும் உரியோ ரில்லை.

க.துரைராசசிங்கம்



# ஆ.மு.சி.வேலழகன்

கவிதை நூலுக்கான ('செங்கரந்தள்') இலங்கை சாகித்திய விருதுபெற்ற கவிஞர் ஆ.மு.சி.வேலழகன், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சாரதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1972 முதல் இன்றுவரை பன்னிரெண்டு (12) நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இவரது சாதனை ஆச்சரியப்பட வைக்கின்றது. அமைதியாகவும், அடக்கமாகவுமிருந்து பேச்சும் மூச்சும் இலக்கியம் என வாழ்ந்துவரும் 'படிக்காத மேதை'யான இவரது பணிகள் பதிவு செய்யப்பட்டுப் பாராட்டப்பட வேண்டியவை. அந்த வகையிலே அவரை மூத்த எழுத்தாளர் அன்புமணி அவர்கள் இங்கே நேர் காணுகின்றார்.

**அன்புமணி :** எழுத்துத் துறைக்கு எவ்வாறு ஈர்க்கப்பட்டீர்கள்?

**ஆ.மு.சி :** நான் திருக்குறளை ஆசானாகவும், அண்ணா போன்றோரின் நூல்களை அநுசரணையாகவும் கொண்டு எழுத்துத் துறையில் புகுந்தேன். எனது சொந்த ஊர் திருப்பழுகாமம். இப்பகுதி மக்கள் விவசாயிகள், நேர்மையானவர்கள். இவர்களது பாரம்பரியப் பண்பாடு, வாழ்வியல், கிராமியக் கலை ஈடுபாடு முதலியவை இலக்கியத்தில் பதிவாக வேண்டும் என விரும்பினேன். எழுதினேன். கவிதை, சிறுகதை, நாவல் என அவை பரிணமித்தன.

**அன்புமணி :** கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய முத்துறையிலும் நீங்கள் முத்திரை பதித்துள்ளீர்கள். இவற்றுள் அதிக ஈடுபாடு கொண்டுள்ள துறை எது?

**ஆ.மு.சி :** கவிதைதான். எனது இதயத்தில் குமுறிக் கொண்டிருக்கும் எண்ணங்கள், கவிதையிலேயே உணர்ச்சிமயமாக வெளிவருகின்றன. அது எனக்கு ஆத்ம திருப்தி தருகிறது.

**அன்புமணி :** இலங்கையில் ஏராளமான கவிஞர்கள் பிரபலம் பெற்றுள்ளனர். ஆனால் நீங்கள் அப்படியில்லையே?



**ஆ.மு.சி :** உண்மைதான். ஆனால் நான் பிரபலம் பெறாவிட்டாலும் எனது கவிதைகள் பிரபலம் பெற்றுள்ளன. என் கவிதைகளைப் பற்றி கவிஞர் காசி ஆனந்தன் 1972ல் பின்வருமாறு பாடினார்,

வேலழகன் தமிழ் வெல்லும்.
பாலழகும் தேனழகும் பிறர் படைப்பார் தமிழில்
ஆனால் இவரோ -
வேலழகும், வெந்தழலகும் படைத்தார்
தமிழினத்தின் உள்ளிருக்கும்
பாழ் வெறியர் வீழுதற்கே.
சாதியெனும் பொல்லாச்
சனியோடு உறவுடையார்
வீதியிலே இனி வந்தால்
வெட்டுண்டு வீழ்வார்.
வேலாலே அல்ல; வாளாலே அல்ல;
வேலழகன் தமிழாலே.
சீர்திருத்தம் வேலழகன் சிந்தனை.

இப்படி இன்னும் பல வரிகள் பாடியுள்ளார்.

**அன்புமணி :** கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்கள் கவிதை எப்போதும் வீச்சான கவிதைகளாகவே இருக்கின்றன. அதுமட்டுமல்ல, மரபுக்கவிதைகளையே எழுதி வருகின்றீர்கள். யாப்பியல் படித்துள்ளீர்களா?

**ஆ.மு.சி :** இல்லவே இல்லை, அதனாலேயே எனது உள்ளத்து உணர்வுகள் அப்படியே வெளிவருகின்றன. அதனாலேயே அவை வீச்சான கவிதைகளாக அமைகின்றன.

**அன்புமணி :** சிறுகதை, நாவல் முதலிய ஆக்க இலக்கியங்களும் படைத்துள்ளீர்கள். அந்த ஈடுபாடு எப்படி ஏற்பட்டது?

**ஆ.மு.சி :** நான் ஏற்கனவே கூறியது போல, நமது கிராமத்து மக்களின் பேச்சுத்தமிழ், பழக்கவழக்கங்கள் என்பன எழுத்தில் பதிவாக வேண்டும் என்ற ஆர்வமே அந்தக் காரணமாகும்.

**அன்புமணி :** இதுவரை எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறீர்கள்?

ஆமு.சி : இந்தா இருக்கிறது பட்டியல். பார்த்துக் கொள்ளுங்கள்.

நூற்பட்டியல்

1. தீயும் தென்றலும் (கவிதைத் தொகுதி - 1972)
2. சாதியா சதியா? (உரைச்சித்திரம் - 1973)
3. உருவங்கள் மானிடராய் (கவிதைத்தொகுதி - 1994)
4. கமகநிலா (சிறுகதைத் தொகுதி - 1996)
5. வேலழகன் கவிதைகள் (கவிதைகள் - 1996)
6. மூங்கில்காடு (சிறுகதைகள் - 2001)
7. விழியும் வழியும் (கவிதைகள் - 2001)
8. சில்லிக்கொடி ஆற்றங்கரை (நாவல் - 2004)
9. கோடாமை சான்றோர்க்கணி (நாவல் - 2006)
10. செங்காந்தள் (கவிதைகள் - 2006)
11. இவர்கள் மத்தியிலே (நாவல் - 2006)
12. கேட்டுப்பெற்ற வரம் (சிறுகதைகள் - 2007)

அன்புமணி : **தொகுத்துக் கூறுவதானால், 5 கவிதை நூல்கள், 4 சிறுகதை நூல்கள், 3 நாவல்கள்.**

ஆமு.சி : இவற்றுள் 'செங்காந்தள்' கவிதை நூல் சாகித்தியப் போட்டியில் பரிசு பெற்றது. 'மூங்கில்காடு' நாவலை தமிழ்நாடு பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் இளங்கோ ஆய்வுசெய்து M.Phil பட்டம் பெற்றுள்ளார். 'சில்லிக்கொடி ஆற்றங்கரை' நாவலைத் தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் இரா. கோவிந்தன் ஆய்வு செய்து M.Phil பட்டம் பெற்றுள்ளார். இலங்கையில் கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் சில நூல்களை ஆய்வுக்குகெடுத்துள்ளனர்.

அன்புமணி : **இது உங்களுக்குப் பெரிய கௌரவம். வெளியே தெரியாததால் இந்தப் பெருமை பலருக்குத் தெரியவில்லை. போகட்டும். இது வரை நீங்கள் பெற்ற பரிசுகள், பாராட்டுக்கள், கௌரவங்கள்?**

ஆசி.மு. : சாகித்தியப் பரிசு பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன். இதுதவிர, தமிழ்நாட்டில் அமைச்சரும், பேராசிரியருமான க. அன்பழகன், காந்தி காமராஜ் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு மகத்தான விழாவில் எனக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இது 1996.05.09ம் திகதி நடைபெற்றது.



மேலும், கொழும்பில் *Ceylon United Stage* நிறுவனத்தினரால் இலக்கியத்திற்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். இது 12.09.1999 இல் நடைபெற்றது. மேலும், 2003 இலும், 2004 இலும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்களான வே. சண்முகம், செ. புண்ணியமூர்த்தி ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். 2006 இல் இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் 'கலாபூஷணம்' விருது கிடைத்தது.

அன்புமணி : **மட்டக்களப்பு எழுத்தாளர் பேரவையில் அங்கம் வகிக்கிறீர்கள். அதுபற்றிக் கூறுங்கள்.**

ஆமு.சி : இப் பேரவையின் பணிகளில் நான் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். எனது இரு நூல்களான 'செங்காந்தள்', 'இவர்கள் மத்தியிலே' ஆகியவை இப்பேரவையின் அனுசரணையுடன் வெளியீட்டு விழாக் கண்டன.

அன்புமணி : **உங்கள் நாவல் ஒன்று பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகை ஒன்றில் தொடர்ச்சியாக வெளிவந்ததென அறிகிறேன்.**

ஆமு.சி : ஆம். எனது 'சில்லிக்கொடி ஆற்றங்கரை' என்ற நாவலே அவ்வாறு வெளிவந்தது.

அன்புமணி : **தாங்கள் பல மன்றங்களை ஆரம்பித்துப் பல்வேறு சமூகப் பணிகளைப் புரிந்ததாகவும் அறிகிறோம். அதுபற்றிக் கூறுங்கள்.**

ஆமு.சி : நான் ஆரம்பித்து நடாத்திய மன்றங்களின் விபரம் இந்தப் பட்டியலில் இருக்கிறது. பாருங்கள்.

பட்டியல்

1958 - திருப்பழுகாமம் கண்ணகி கலைக்கழகம்
1963 - அமிர்தகழி புன்னச்சோலை - முரசொலி நாடகமன்றம்
1965 - திருக்குறள் முன்னணிக்கழகம்
1970 - மட்டுநகர் தமிழ் கலாசார மன்றம்
1971 - மட்டுநகர் திருக்குறள் முன்னணிக்கழகம்
1981 - திருக்குறள் முன்னணிக் கழகம், திருப்பழுகாமம்
1985 - மட். இ. போ. ச. கலாசார மன்றம்
1988 - படுவான்கரை விவசாயிகள் அபிவிருத்திக் கழகம்
1989 - அம்பாறை மகிந்தபுர திருக்குறள் முன்னணிக்கழகம்

1997 - மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் எழுத்தாளர் பேரவை
2004 - வாழைச்சேனை திருக்குறள் முன்னணிக்கழகம்

**அன்புமணி :** **இந்தப் பட்டியலைப் பார்க்கும் போது, திருக்குறளில் உங்களுக்குள்ள ஈடுபாடு தெரியவருகிறது?**

**ஆ.மு.சி :** திருக்குறள் என் ஜீவநாடி. உயிர்மூச்சு!

**அன்புமணி :** **அதுசரி, இந்த மன்றங்கள் மூலம் என்ன பணிகளை ஆற்றினீர்கள்?**

**ஆ.மு.சி :** பல இளைஞர்களை இலக்கியத் துறையில் ஈடுபட வைத்தும் பல அறிஞர்களை அழைத்து, விழாக்கள் நடாத்தி பேருரை ஆற்றவைத்தும், இளைஞர் மத்தியில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஊருக்குப் பயன்படும் பல பணிகளை மேற்கொள்ள வைத்தும் வருகிறேன். அவ்வப்போது வேறு பல பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன்.

**அன்புமணி :** **தாங்கள் வாழ்க்கை பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்?**

**ஆ.மு.சி :** அது ஒரு தொடர்கதை. முடிந்தவரை சுருக்கமாகக் கூறுகிறேன். எனக்கு ஆண் பிள்ளைகள் 5. பெண்கள் 4. பெண்களில் வாசுகி, வேல்விழி ஆகிய இருவரும் தங்கள் கணவன்மாருடன் கனடாவில் 'செட்டில்' ஆகிவிட்டனர். ஏனைய இரு பெண்களான திருமதி. கலா நற்குணம், திருமதி. மணிமேகலை ஆகியோர் நமது நாட்டிலேயே இருக்கின்றனர்.

**அன்புமணி :** **ஐந்து ஆண்பிள்ளைகள் என்று கூறினீர்களே! அவர்கள்?**

**ஆ.மு.சி :** ஐந்து ஆண்பிள்ளைகளில் எனது இளையமகன் இளவழகன் தமிழ்நாட்டில் 16 வயதில் விபத்துக்குள்ளாகிக் காலமாகிவிட்டார். மூத்தமகன் உதயகுமார் இங்கே இ.போ.ச. இல் கணக்காளராகக் கடமையாற்றுகின்றார். இரண்டாவது மகன் கருணாநிதி தனது சொந்த முயற்சியால் *BA, MA, Mphil, Ph.D* முதலிய கல்வித் தகைமைகளைப் பெற்று, தமிழ் நாட்டில் 'பார்க்கர் பிரிண்டர்ஸ்' என்று பாரிய பதிப்பகம் ஒன்றை நடாத்தி வருகிறார்.



இவர் ஒரு இலக்கியவாதி. "கீழைக்காற்று", "வைகறை", "மேலாடை", "மனிதப்பலிகள்", "கூத்துக்கலைஞன்" முதலிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

**அன்புமணி :** **உங்கள் நூல்களும் இதே பதிப்பகத்தில்தான் பதிப்பிக்கப்பட்டனவா?**

**ஆ.மு.சி :** சில நூல்கள் அங்கே பதிப்பிக்கப்பட்டன. ஆனால் இலங்கையிலுள்ள பல பிரமுகர்கள், பேராசிரியர் மௌனகுரு போன்றவர்கள் தமது நூல்களை அங்கே பதிப்பித்திருக்கின்றனர்.

இலங்கை மட்டுமல்ல, லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய பல நாடுகளிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் தமது நூல்களை இங்கே பதிப்பித்துள்ளனர்.

**அன்புமணி :** **நிச்சயமாக அது ஒரு பாரிய வெளியீட்டு நிறுவனம்தான்.**

**ஆ.மு.சி :** மேலும் கடந்த 2006 இல் காலஞ்சென்ற பேராசிரியர் அருணாசலம் (தமிழ்நாடு) அவர்களின் தமிழ் இலக்கியம் சம்பந்தமான ஆய்வுகளை, 14 தொகுதிகளைக் கொண்ட நூலாகப் பதிப்பித்துக் கொடுத்திருக்கிறார். அதன் வெளியீட்டு விழா மகத்தான விழாவாக நடைபெற்றது.

**அன்புமணி :** **ஏனைய புதல்வர்கள் என்ன செய்கிறார்கள்?**

**ஆ.மு.சி :** மூன்றாவது மகன் உதயசூரியன் தமிழ் நாட்டில் ஸ்ரீபெரம்புதூர் என்ற ஊரில் "நிவேதா டிரவல்ஸ்" என்ற பெயரில் பல பஸ்களைக் கொண்ட ஒரு தனியார் போக்குவரத்து நிறுவனத்தை நடாத்தி வருகிறார்.

நான்காவது மகன் சிற்றரசு தமிழ்நாட்டில், கஸ்தூரியார் சங்கீதக் கல்லூரியில் படித்து இசைமாணிப் பட்டம் பெற்றதோடு, சினிமாத்துறையில், 1994 முதல் படப்பிடிப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார். இவரது மனைவியும் இசைமாணிப் பட்டம் பெற்றவர். சினிமாத்துறையில் பின்னணிப் பாடகியாக உள்ளார். பெயர் திருமதி. கங்கா சிற்றரசு.

அன்புமணி : அடேயப்பா! ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி உள்ளது உங்கள் குடும்பம். நீங்கள் ஆலமரமென்றால், உங்கள் பிள்ளைகள் விழுதுகளாக இருக்கிறார்கள்.

ஆ.மு.சி. : அதற்கான காரணம், இவர்கள் எல்லோரும் உண்மை, நேர்மை, உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றைக் கடைப் பிடித்து வாழ்வதுதான்.

அன்புமணி : "ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பது?

ஆ.மு.சி. : அப்படி ஒரு குறள் இல்லையே!

அன்புமணி : இது குறள் அல்ல. புறநானூற்றுப் பாடல் வரிகள். அதை நீங்கள் செயலில் காட்டியுள்ளீர்கள்.

ஆ.மு.சி. : எல்லாம் இறைவன் செயல்.

அன்புமணி : அதுசரி, ஏன் உங்கள் பெயரை ஆ.மு.சி.வேலழகன் என்று வைத்துள்ளீரகள். புனைப்பெயர் சுருக்கமாக அமைவதுதானே வழக்கம்?

ஆ.மு.சி. : எனது இயற்பெயர் சி.வேல்முருகு. புனைப்பெயரிலுள்ள ஆ.மு.சி. என்பது ஆதிநாராயணன், முத்து, சின்னத்தம்பி என்ற பெயர் களைக் குறிக்கும். ஒரு எண்ணத்தில் அப்படி வைத்துக்கொண் டேன். எனது ஊர் கிங்காரக்கண்டி என்னும் மறுபெயர் கொண்ட "திருப்பழுகாமம்" ஆகும். தந்தையார் பெயர் ஆதிமுத்து சின்னத் தம்பி. தாயார், வேலாயுதர் வள்ளியம்மை. இந்தப் பெயர்களும் எனது புனைப்பெயரில் ஒளிந்துகொண்டிருக்கின்றன.

அன்புமணி : இலக்கிய உலகில் உங்கள் சாதனைகள் என்ன? எதிர்கால இலட்சியங்கள் என்ன?

ஆ.மு.சி. : சாதனைகள் தொடர்ந்து எழுதிவருவது. எதிர்கால இலட்சிய மும் தொடர்ந்து எழுதுவதுதான்.



அன்புமணி : நிறைவாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

ஆ.மு.சி. : எழுத்தாளர் என்று சொல்லிக் கொள்பவர்கள் தொடர்ந்து எழுதவேண்டும். அந்த எழுத்து, மக்களுக்கும், சமுதாயத்திற்கும் நன்மை பயக்க வேண்டும். நான் எனது வாழ்நாள் முழுவதும் பல சவால்களுக்கு முகங்கொடுத்தும், பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து எழுதி வருகிறேன். ஒரு எழுத்தாளனால் எழுதாமல் இருக்க முடியாது. அதுவே உண்மையான எழுத்தாளனின் இயல்பு. பாரதியார் என்ன சொன்னார்?

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமைவேண்டும்
நினைவில் நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்

இதுவே ஒரு எழுத்தாளனின் லட்சியமாக இருக்க வேண்டும்.

■ ■ ■




வாசகர்களின் வினாக்களுக்கு இப்பகுதியில் விடை அளிக்கப்படும். கலை. இலக்கியம் சார்ந்த வினாக்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், 'செங்கதிர்',
இங்கே விடை.எங்கே வினா?
இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.

# வாழும்போதே வாழ்த்துவோம் !



ஆசிரிய சிரோமணி த.செல்வநாயகம்

அமரர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினருக்கு மட்டக்களப்பு ஆரையம்பதியில் 1927.04.03 அன்று பிறந்த திரு.த.செல்வநாயகம் அவர்கள் தற்போது தனது 81வது அகவையில் வாழ்ந்துகொண்டிருக்கும் மூத்த பிரஜையாவார்.

தனது ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி மூத்த தம்பி நொத்தாரிஸ் வித்தியாலயத்தில் கற்று, பின்னர் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம், கல்லடி உப்போடை சிவாநந்த வித்தியாலயம் ஆகியவற்றில் தொடர்ந்து, பின் 1946 இல் மட்டக்களப்பு ஆண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று ஆசிரியராகி இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பாடசாலைகளிலும் கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டுச் சிறந்த மாணவர் சமூகமொன்றை உருவாக்கியவர்.

1971 இல் பது/கொஸ்லாந்தை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபராகி மீண்டும் மட்டக்களப்பிற்கு வந்து கோட்டைமுனை மகா வித்தியாலயத்தில் (தற்போது இந்துக்கல்லூரி) பணிபுரிந்து 1973 இல் கோட்டைமுனை கனிஸ்ட வித்தியாலயத்தின் அதிபராகச் சேவையாற்றி 1987.04.03 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

☆ மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரம்பப் பாடசாலைகளின் '**சிறந்த அதிபர்**' என்ற பெயரைப் பெற்றுக்கொண்டவர்.

☆ 1979 இல் இவரது சேவையைப் பாராட்டி மட்டக்களப்பு '**ரோட்டரிக்**' கழகம் பரிசு வழங்கிக் கௌரவித்தது.

☆ மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஸ்ட வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் இவர் ஓய்வு பெற்றபோது '**ஆசிரிய சிரோமணி**' பட்டமளித்துக் கௌரவித்தது.

☆ மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை தனது பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது தனது மூத்த மாணாக்கனாகிய இவருக்கு '**செம்மனச் செல்வர்**' என்ற பட்டமளித்து மகிமைப்படுத்தியது.


☆ கிழக்குப் பிரதேச ஆசிரியர் தொழிற்சங்கம் - மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் - புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றம் - சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை - மட்டக்களப்பு மாவட்டக் கலாசாரப் பேரவை - ஆரையம்பதி, கோட்டைமுனை திசவீரசிங்கம் சதுக்கம் விநாயகர் ஆலய அறப்பணி - இவற்றினூடாக மட்டக்களப்பு மாவட்ட சமூக, கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியில் தனது ஆளுமையையும் ஆற்றலையும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளினூடாக வெளிப்படுத்தியவர்.

☆ புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்றத்தினூடாக அன்னாரின் '**உள்ளதும் நல்லதும்**' ; '**விபுலானந்தர் மீட்சிப்பத்து**' ; '**பாலைக்கலி**' ஆகிய நூல்கள் வெளிவரத் துணை நின்றவர். மன்றத்தின் செயலாளராகவும் பணிபுரிந்தவர்.

☆ மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் 24.05.2008 அன்று தனது பவள விழாக் கொண்டாட்டத்தின் போது கௌவித்த துறைசார் திறமைகொண்ட பழைய மாணவர்களுள் இவரும் ஒருவர்.

☆ அமரர் ருத்திராம்பாள் செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கைத் துணைவனாகவும் - வினோதா, சசிதரன், திலீபன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் தந்தையாகவும் விளங்கி குடும்ப வாழ்வுடன் பொதுப் பணியிலும் தன்னை இணைத்துக் கொண்டு இன்றும் இளைஞனைப் போன்று உற்சாகத்துடன் உழைத்து வரும் '**ஆசிரிய சிரோன்மணி**' திரு.த.செல்வநாயகம் அவர்களை '**செங்கதிர்**' வாழும்போதே வாழ்த்திச் சங்கை செய்கிறது.

- ஆசிரியர் -



## ஒளி ஓவியம்

இருட்டில்


ஒளி ஓவியக்

கண்காட்சி!

மின்மினிப்

பூச்சிகள்

சிவராஜா மௌனதேவ



# மந்திரச் சொல்

– மண்டூர் தேசிகன் –

டாணியலுக்கு மனம் இன்னமும் சரிப்படவில்லை. அன்று முற்பகல் நடந்த அந்த உரிமை மீறல் அல்லது அதிகார துஸ்பிரயோகம் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது. தென்னிந்தியாவிலிருந்து தனது இளமைப் பருவத்தில் இலங்கை நாட்டிற்கு வந்து குடியேறி எவ்வளவோ தொழில்களை செய்து இன்று வரை எவ்வளவோ அனுபவங்களையும் வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கிய அவன் மனம் இன்று முற்பகல் தனது பலசரக்கு கடையில் வைத்து தனக்கு நடந்த அந்த அச்சுறுத்தலால் குழம்பிப் போயே விட்டது.

அலோசியசும் ஒரு கிறிஸ்தியன் தான். ஆனால் அவனை உண்மைக் கிறிஸ்தியன் என்று எப்படி ஏற்றுக் கொள்வது.

அலோசியசின் வார்த்தைகள் மிகவும் இறுக்கமானதாக இருந்தது. ‘டாணியல்.... சொல்வதை நன்றாக கேள். நான் நினைச்சா இப்பவே உன்ன கைது செய்ய முடியும் கோட்ல நிறுத்தி தண்டன வாங்கித் தர முடியும்’

‘உன்ர கடையில இருக்கிற தராசு பொட்டத் தராசென்று கூறுவன்..... விலைப்பட்டியல் இல்லையென்பன், அடிக்கடி வந்து தொல்லை கொடுப்பன். ஒரு கதையும் வேணாம். நான் சொல்வத கவனமாக்கேளு. வேணுமெண்டா பக்கத்து கடைகளில விசாரிச்சுப் பாரு என்னோட மோதி எவரும் வெண்டதா சரித்திரமே இல்ல’

‘மாதா மாதம் முதலாம் திகதி இரண்டாயிரத்து ஐந்நூற வீட்டில கொண்டு கட்டிப் போட்டுப் போ. நான் இந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டன்.’



டானியலின் கடையில ஒரு காலத்தில் ஓ..கோ என்று வியாபாரம் நடந்தது உண்மைதான். நியாயமான வியாபாரி. கடவுளுக்குப் பயந்தவர். வாடிக்கையாளர்களுடன் நகைச்சுவையாக கதைப்பவர் என்று எல்லோருக்கும் தெரியும். அதனால டாணியல் கடைக்கு ஒரு தனிமதிப்பு ‘வெஸ்ஸ் மார்க்’ இருந்தது உண்மைதான்.

“என்ன முதலாளி உங்களுக்கு பயமில்லையா? வளைச்சி வளைச்சி ஷெல் விழுந்து வெடிக்குது நீங்க என்னடா என்டா துணிச்சலா கடை திறந்து வியாபாரம் பண்ணுறியள்.”

“நான் ஏன் பயப்பட வேணும். இந்தா பார். கையில பேப்பர் இருக்கு ஷெல் வந்தா சுருள சுத்தி அப்படியே குடுத்து வாங்கி அங்கால போட்டு விடுவன்” மிட்டாய் வாங்கவரும் சிறுவர்கள் டாணியலின் கையிலுள்ள சுருளையும் டாணியலையும் பார்த்து வியந்து நிற்பர். அவர்கள் மனதில் டாணியல் பெரிய ஹீரோ தான்.

என்னதான் தமாஸ் பண்ணினாலும் ‘மல்டிவெரல்’ அடியில ஊரோடு சேர்ந்து ஓடி அகதியாகி அடிபட்டு மீள் குடியேற்றப்பட்டதில சில அற்ப உதவிகளோட கடைய மீளமைச்ச டாணியல் நொந்து போய்த்தான் இருந்தார். இரண்டாயிரத்து ஐந்நூறு என்பது இன்றைய நிலையில் டாணியலுக்கு பெரிய தொகையாகத்தான் இருந்தது. இருந்தும் என்ன செய்யலாம். ‘அரசாங்க கோழி முட்டை கருங்கல்லையும் உடைக்கும்’. வாயவயிரக்கட்டி என்டான மாதாமாதம் முதலாம் திகதி கட்டித் தீர்க்க வேண்டியதுதான்.

முதலாம் மாதம் ரவுணுக்கு பஸ் பிடிச்சி அலைஞ்சி அலோசியஸ்சின் வீட்டக் கண்டுபிடிக்கப் பட்டபாடு பெரும்பாடு தான்.

மார்க்கட் ஓரமா ஓரளவு வசதியான வீட்டிலதான் அலோசியஸ் வாழ்ந்தான். அவ்வீடு வாடகவீடாகத்தான் இருக்கவேண்டும். பறங்கியர் சாயலில் இளம்பெண் அவன்ர மகள் என்று சொல்லத்தக்கதாய் அவன் மனைவி இருந்தாள். மறைக்க வேண்டியவை எவை எவை என்பதில் அவளுக்கு கருத்து முரண்பாடு இருக்கலாம் போல ஆடை அணிந்திருந்திருந்தாள்.

டாணியலுக்கு ஒரு புதிய பக்கமாக பெயர் எழுதப்பட்டிருந்தது. அந்த கொப்பிய அவள் எடுத்து வந்தாள். டாணியல் கணக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு என்று சிவப்புமையினால் தொகை குறிப்பிடப்பட்டிருந்தது.

டாணியலும் அந்தக் காலத்தில் இதயும் பார்க்க பெரிய கொப்பி வைத்து மாச சம்பளகாரருக்கு கடனுக்கு கொடுத்தவர் தான். பெரும்பாலும் அந்தக் காலத்தில வாத்திமார் தான் டாணியலிட்ட கடனுக்கு சாமான் வாங்கிற, மாதாமாதம் கடன அடைக்க முடியாம டாணியலிட்ட வந்து தவண சொல்லிப் போறதும் அவங்கதான்.

வாத்திமாருக்கு சம்பளம் குறைவு தான் வேற வருமானமும் இல்லத்தான் என மனதுக்க நினைச்சிக் கொண்டு டாணியல் பொறுத்துக் கொள்ளுவான். மாறாக ஒரு சுடு சொல் சொல்லியறியான். "வயிற்றுக்கு இல்லாட்டியும் வாலாமணி போட்டா வாத்தி தான்" என்கின்ற பழமொழி டாணியலுக்கு தெரிந்திருக்கலாம்.....?

காசை அவள்தான் வாங்கினாள். எண்ணிப்பார்த்து சரியென்றாள். கடன் காறனிட்ட இருந்து நீண்டநாள் தவணை தப்பிய கடனை அறவிட்டது போல அவள் மகிழ்ந்தாள்.

"போயிற்று வாறன் ஐயா"

இம்..இம்...

துரைத்தனத்துடன் தலையாட்டினான் அலோசியஸ்.

கடந்த ஆறுமாதமும் சீராக ஓடி மறைந்தாலும் டாணியலின் கடை வியாபாரம் சூடுபிடிக்கவில்லை. இடம்பெயர்ந்து மீள் குடியேறினாலும் மனதில் ஏதோ ஒரு டும்...டும்.. தான். எந்தவேளையிலும் அது நடக்கலாம். ஏதும் நடக்கலாம். தற்காலிகமான வாழ்க்கைதான். யாத்திரை போவதற்கு தயாரனவர்களது பொதி மூடைகள் ஒவ்வொருவரது வீடுகளிலும் தென்படும்.

முக்கியமான பொருட்களை தூக்கிக் கொண்டு ஓடத் தயாராய் அனுபவம் தந்தபாடமாய் இந்நிலையில் வியாபாரம் எப்படி சூடுபிடிக்கும். இன்று திகதி யூன் இருபத்தெட்டு இரண்டு நாளில் திகதி ஒன்று இண்டாயிரத்து ஐந்நூறு கட்ட வேண்டிய நாள்.

டாணியலின் நெருங்கிய உறவினர் ஒருவர் அந்தக் காலத்தில் இருந்தே டாணியலின் கடையில் வேலை செய்தவர். டாணியல் முன்பு தேநீர்க் கடைதான் வைத்திருந்தார். அந்நாட்களில் மிக ருசியாக கடைக்கு பலகாரங்கள் செய்துதருவதில் கைதேர்ந்தவராக அம்மான் இருந்தார். எல்லோரும் அவரை அம்மான் என்று தான் அழைப்பார்கள். அவரின் தாய் தகப்பன் அவருக்கு வைத்த பெயர் என்னவாக இருக்கும் என்று எவராவது விசாரித்துப் பார்த்ததாகவும் தெரியவில்லை. ரவுணில் ஒரு சிறிய தேநீர்க்கடை பாடசலைக்கு அண்மையாக இருந்ததால் சுமாரான வியாபாரம். பிள்ளகுட்டியும் இல்ல. டாணியல் ரவுண் பக்கம் போகும் போதெல்லாம் அம்மானை கண்டு சுகநலன் விசாரித்து இளமைக்கால நினைவுகளை உரசிப் பார்க்கத் தவறுவதேயில்ல.

அம்மான் குட்டையானவர். உடம்பு முழுக்க தங்க நிற ரோமங்கள் போர்த்துக் கிடக்கும். "ஏப்பா டாணியல் வழிதட்டு பட்டிடிச்சா ரவுணுக்கு வாற நாளையில இஞ்சாலபக்கமும் ஒருக்கா வந்து போவெண்டு சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துப் போச்சி. வேறே யார் இருக்கா. செத்து கிடந்தாலும் யார் வந்து பார்க்கப் போறா. இந்தக் கட்ட அசைந்து திரியக்க மட்டும்தான்.... எல்லாம்". "இல்ல அம்மான் நான் இனிமேல் மாதாமாதம் ரவுணுக்கு கட்டாயம் வருவன். முதலாம் திகதி என்டா நான் வாறநாள் எண்டு நினைச்சிக்கிங்க அம்மான்".



மாதாந்தம் முதலாம் திகதியோ..? ஏன் அப்படி? என்ன கோட்டுக்கட்டள. டாணியல் அது கிடக்கட்டும் வந்தா நிண்டு சாப்பிட்டுத்துத்தான் போக வேணும். வேற யாரு இங்க வாறா. அப்படி வந்தாலும் என்னத்தையும் புடுங்கித்துப் போகலாம்னு தான் வாறாங்க. உன்னப் போல அன்பா இரக்கமா என்ன பாத்துத்து போக எவன் வாறான்." அம்மானின் கண்களில் லேசாக கண்ணீர் கசிகிறது. டாணியலுக்கும் புன்கண்ணீர் பூசல் தருகிறது. இதனால் முதலாம் திகதிக் கதை நிண்டு போகிறது. வயதுபோன காலத்தில நம்மட துக்கங்கள கூறி அம்மானையும் துக்கப்படுத்த டாணியல் விரும்பாததால் கதைய வேற பக்கம் திருப்பி வைத்து விடுகிறார்.

அம்மானிடம் பணம் இரண்டாயிரம் கைமாத்தா பெறும் தனது எண்ணத்தை டாணியல் கைவிட்டு வீடு திரும்பி விடுகிறார். இது நடந்து ஐந்தாறு நாள்தானே இருக்கும் இப்படிப்பட்ட அம்மானுக்கு திடீரென்று என்னவந்தது. தந்தியைக் கண்டதும் மனம் பதற "பரமண்டலங்களில் இருக்கின்ற எங்கள் பிதாவே....." பிரார்த்தனையின் மூலம் டாணியல் மனச்சாந்தியடைகின்றார்.

நகரத்து ஆஸ்பத்திரி என்பதை விட அரசாங்க ஆதார வைத்தியசாலை எனப் பெயர் பொறிக்கப்பட்ட ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு விரைகின்றார். இங்கும் அதே பல்லவிதான். தெரிஞ்சவன் தெரியாதவன். சொந்தக் காரர் யாரும் ஆஸ்பத்திரியில் வேலைபார்ப்பது இப்படி பலவித செல்வாக்குகள் தலைவிரித்தாடும் தர்மாஸ்பத்திரி. இங்கும் அலோசியஸ்களும் இருக்கக்கூடும். பன்னிரெண்டு மணிக்கு இன்னும் இருபது நிமிடத் துளிகள். வெளியே இரண்டாயிரம் பார்வையாளர்கள் காத்திருக்க வாச்மென் வேலாயுதத்தின் காக்கிச் சட்டைக்குள் வைத்த இருபது ரூபா வேலையை இலகுவாக்கி விடுகிறது. "இஞ்சே டாக்டர் வந்தபிறகு தான் வாட்டுக்குள்ள நுழையனும் தெரிஞ்சுதா" என்ற உத்தரவுடன் வைத்தியசாலையின் ஒன்பதாம் வாட்டிற்குள் நுழைகின்றார் டாணியல்.

ஒவ்வொருவராக பார்த்து செல்கின்றார். அம்மானைக் காணவில்லை. ஆண்டவரே எனது அம்மானுக்கு எதுவும் நடந்திருக்கக் கூடாது. பக்கத்துக் கட்டிலில ஒரு உருவம் உடம்பெல்லாம் 'வெண்டேச்'. அது யாராக இருக்கலாம். ஆண்டவரே உமக்கு ஸ்தோத்திரம்... ஸ்தோத்திரம். ஆ.....ஆ....மெதுவாக கையசைத்து கூப்பிடுகிறது அந்த உருவம். என்னைத் தான் அழைக்கிறது. அம்மான்.... அம்மான்.... ஓடிச்சென்று கட்டிலையடைந்த டாணியல் திடுக்கிட்டு ஓரடி பின்வாங்குகின்றான். இது..... அலோசியஸ்தானே. "ஐயா..... ஐயா.... என்ன ஐயா என்ன நடந்தது..... . ஏன் அலோசியசின் கண்கள் கலங்குகின்றன அலோசியசால கதைக்க முடியாதா.....? எழுந்து நடமாடவும் முடியாதா.....? அலோசியஸ் ஏதோ முணுமுணுக்கிறான். என்னவாகயிருக்கும் "ஆண்டவரே

செய்த தவறை எண்ணி கலங்குகிறான். பாவமன்னிப்பு கேட்கும் அவனை மன்னியும் பிதாவே''

அலோசியஸ் அவஸ்தைப்படுகின்றான்.

டானியல் குனிந்து அலோசியஸ் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்கின்றான். டானியலுக்கு மற்றுமோர் அதிர்ச்சி காத்திருக்கிறது. இப்படியும் மனிதர்களா...?

பக்கத்துக் கட்டில்காரன் கேட்கிறான் ''இந்த ஆள் இரண்டு நாளா பேச்சு மூச்சு அற்றுக்கிடந்தவர். இண்டைக்குத் தான் நாலு சொல் கதைச்சிருக்கார். தம்பி ஐயாவுக்கு நெருங்கிய உறவோ.....? அப்படி என்ன இரகசியம் தம்பி ஐயா கூறினார்'' இன்னம் ஒரு சில நோயாளிகளும் கேட்க ஆசைப்படுகின்றனர்.

அந்த மந்திரச் சொல்லுக்கு கட்டுப்பட்ட டானியல் வீடு வந்து சேர்கின்றான். மறுபடியும் அடுத்த நாள் ரவுனுக்கு பயணமாகிறான். கால்கள் அலோசியசின் வீட்டை நோக்கி செல்கின்றன. நேரம் மதியம் பதினொரு மணி. அலோசியசின் மனைவி இனித்தான் ஆஸ்பத்திரிக்கு செல்வாள். அதற்கு முன் சென்றால் வேல லேசாகிவிடும்.

என்ன இது வழி தவறி விட்டோமா....? அலோசியஸ் வீடு தானே இது... ஏன்? கேற்றடியில் வெள்ளக்கொடி தூங்குகிறது. டானியல் நினைத்தது சரிதான். முன் மண்டபத்தில் சலனமற்றுக் கிடக்கிறது புகழுடம்பு. உறவினர்கள் யாரும் இல்லையோ...? அல்லது ரவுண் நாகரிகம் இதுதானோ? கதறி அழுதால் துக்கம் குறையுமாம். அப்படி யாரும் இல்லையா? மெழுகுவர்த்தி மாத்திரம் வழமைபோல் அழுகிறது. அழட்டும்.

அலோசியசின் மனைவியையும் காணவில்லையே... எங்கே எங்கே...? ஒரு துர் நாற்றம் முகத்தில் பிணநாற்றமாய் அடிக்கிறது.

திரும்பி கேற்றடிக்கு வருகின்றான் டானியல். எதிரில் உள்ள பெட்டிக் கடையில் விசாரிக்கிறான். ''அது என்னத்த கேப்பான் பாருங்கோ. அந்த ஆள் அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனதுதான் தாமதம் அவள் கள்ளப்புருசனோடு ஓடியல்லோ போயிற்றாள்.''


மரண வீட்டுச் செலவுக்காக வரி அறவிடப்படுகிறது. அந்தக் கொப்பியின் மறுபக்கத்தில் டானியல் கணக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு..... கொப்பியில் சிவத்த எழுத்தில்....?

**எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர், 'செங்கதிர்'**
இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.



# எங்கள் பூமி



- வாகரைவாணன்-

சூரியன் தோன்றும் பக்கம்
சொல்லொணா அழகுக் கோலம்.
காரிருள் போலும் ஆழி
கழிமுகம் கானலோடு
பேரெழில் செய்யுமம்மா.
பெருமையை என்ன சொல்வேன்!
வாரியே அணைத்துக் கொள்ளும்
வாகரை எங்கள் பூமி!

ஆற்றினில் மீன்கள் ஓடும்;
அவற்றோடு தோணி ஓடும்.
சேற்றினில் கலப்பை ஓடும்;
சேர்ந்தந்தப் பனையான் ஓடும்.
ஏற்றத்தில் பாடல் ஓடும்;
இனிய தேன் அதிலே ஓடும்.
போற்றிடும் எங்கள் பூமி
புகழுரை போதுமாமோ?

ஆறதன் கரையின் ஓரம்
அரண் எனக் காவல் செய்யும்
ஏறெனத் தென்னஞ்சோலை.
இளந்தென்றல் ஊஞ்சலாடும்.
பேறெனத் தோன்றும் அந்தப்
பெருமணல் பஞ்சமெத்தை.
ஊரிதைப் போலும் வேறு
உண்டுமோ உலகந்தன்னில்?

நானில வளத்தினோடு
நல்லதோர் வரலாற்றோடு
மானிலம் வியக்கும் வண்ணம்
மாறிடாப் பெருமையோடு
தேனிலமாக நாளும்
செழித்திடும் கிராமம் அன்று
கோநிலமாகும், தமிழர்
கொற்றமும் வாழுமம்மா!

அந்நியர் பூமி அல்ல;
அருந்தமிழ் மக்கள் வாழும்
மண்ணிது; காலம் தோறும்
மாறிடாச் செழிப்பினாலே
பொன்னென ஒளிரும், இந்தப்
பூமியில் போட்டதெல்லாம்
கண்ணினை அள்ளிக் கொள்ளும்
காட்சி பேரின்பமாம்!

பாறைகள் மலைகளெல்லாம்
பழந்தமிழ் மக்கள் வாழ்ந்த
சீரிடம் இதுவே என்னும்
செய்தியை எடுத்துச் சொல்லும்.
ஊறிடும் நீரில் கூட
ஊரதன் வாசம் வீசும்.
வேறிடம் இருந்து வந்த
விதேசிக்குப் புரியுமாமோ?

## தமிழறிவோம்

### பெண்களின் பருவம்

| | | |
|---|---|---|
| ஏழு வயது வரை | - | பேதை |
| எட்டு முதல் பதினொரு வயது வரை | - | பெதும்மை |
| பன்னிரெண்டு முதல் பதின் மூன்று வரை | - | மங்கை |
| பதினான்கு முதல் பதினாறு வயது வரை | - | மடந்தை |
| பதினேழு முதல் இருபத்தைந்து வயது வரை | - | அரிவை |
| இருபத்தாறு முதல் முப்பத்தொன்று வரை | - | தெரிவை |
| முப்பத்திரெண்டு முதல் நாற்பதுக்குட்பட்டோர் | - | பேரிளம் பெண் |

- திருவேணன்.



# இளையோர் பக்கம்




இப்பகுதி இளையோருக்கானது. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
இளங்கதிர், மே/பா, 'செங்கதிர்' ஆசிரியர்.
இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.

## புதுமுக அறிமுகம்


மலர்ராஜன் கிறிஸ்ரி ராஜ்குமார்

பெயர் : மலர்ராஜன் கிறிஸ்ரி ராஜ்குமார்

தொழில் : ஆசிரிய மாணவன்,
கவிதை, சிறுகதை, நாடக ஆக்கம்
ஆகிய துறைகளில் ஆர்வம்.

தற்போதைய முகவரி : ம.கி.ராஜ்குமார்,
2ம் வருடம்,
கிறிஸ்தவப் பிரிவு,
வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி
பூந்தோட்டம், வவுனியா.

நிரந்தர முகவரி : ம.கி.ராஜ்குமார்,
கடற்கரை வீதி,
திருக்கோவில் - 01. (E.P.)

அறிமுக ஆக்கம் : "அறிந்தும் அறியாமலும்" - சிறுகதை.

# அறிந்தும் அறியாமலும்

-ம.கி.ராஜ்குமார்.



பூந்தோட்டச்சந்தியில் சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. எல்லோரும் குழுமிநின்று எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டு தான் நிற்கிறார்கள். இடம் சற்று கலவரமாகத்தான் இருக்கிறது. நான்கைந்து இராணு வத்தினர் ஆயுதங்களுடன் நிற்கிறார்கள். இவற்றை ஒட்டு மொத்தமாக நிதானிக்கும் போது ஏதோ விபரீதம், என்பது மட்டும் நன்கு புரிகிறது.

•

நகரத்துக்குள் செல்லவேண்டிய சில அலுவல்களின் நிமித்தம் லீவு போட்டுக் கொண்டு வெளியில் வந்த எனக்கு இதற்கு முன் என்ன நடந்தது என்று தெரிய நியாய மில்லைத்தான். ஆனாலும் உயர்கல்வி கற்கும் ஒரு மாணவனாக இருந்தும் வெளியுலகம் தெரியாத கிணற்றுத் தவளை போல நடப்பது என்ன? என்னும் கவலை சிறிதுமின்றி நாட்டு நிலமை போகும் போக்கு அறியாமல் நிம்மதியாக இருக் கின்றோம் என்பதை நினைக்க சிரிப்பும் வந்தது. மறுபுறம் சிந்தித்தால் அதுவும் ஓர் நன்மையான விடயம் தான், 'உலகத்தை விட நிம்மதியாக இருக்கிறோம்' எனவும் சிந்திக்கத் தோன்றுகின்றது. "எது நடக்கி றதோ அது நன்றாகவே நடக்கிறது" என்று எனக்குள் கீதா உபதேசம் சொல்லி சாந்த மாகிக் கொள்கிறேன். "கூட்டத்திற்குள் நடப்பது என்ன?" மனம் கேள்வி கேட்டது. "எனக்கேன் வீண் வம்பு!" மனமே பதில் சொல்லிக் கொள்ள மெல்ல அங்கிருந்து நகர முயல்கிறேன்.

'தம்பி யா!'

கொச்சைத்தமிழ் காதில் விழ திரும்பிப் பார்க்கிறேன். இராணுவ சிப்பாய் ஒருவன் வந்து அடையாள அட்டையைக் கேட்கிறான்.

'வித்தியாபீட......ஸ்டுடன்'

ஏதோ எனக்குத் தெரிந்த அரைகுறை சிங்களம், ஆங்கிலம் என்று கலந்தடித்து கூறிக்கொண்டு 'கொலீஜ் ஐசீ' ஐ நீட்ட அவன் நிமிர்ந்து பார்த்துது விட்டு புன்னகைத்துவிட்டு போகச் சொல்கிறான்.

ம்! சிங்களம், ஆங்கிலம் தெரிஞ்சிருக் கிறது எவ்வளவு பிரயோசனம்? மனதிற் குள்ளே கல்லூரிக்கு சிறிய நன்றி சொல்லிக் கொண்டே அங்கிருந்து மெல்ல விலகு கிறேன். கூட்டம் கலைந்தபாடில்லை.

'உள்ளே நடப்பது என்னவாக இருக்கும்...?' மெல்லத் திரும்பிப் பார்க்கிறேன். மனம் ஒரு



...ர்கென்று சும்மாவா சொன்னார்கள்? ...ருகில் வந்த ஒருவரிடம் மெதுவாகக் ...ட்டேன். ""வெடி ஒண்டு கிடக்கு ...ம்பி" சாதாரணமாக சொல்லிக்கொண்டே ...ந்து போகிறார் அவர். சாதாரணமாக ...ன்றைய 'அன்றாட செய்தி'யாகக் கேட்பது ...னே. அவன் மிக சாதாரணமாக சொல் ...லிக் கொள்வதிலும் காரணம் இருக்கிறது.

...ந்தியெல்லாம் வெடி, சாவு கேள்விப்பட் ...ாலே பெரிய புதினம், அம்மாவே 'வெளிய போகாத' எண்டு தடுத்துப்போடுவா. 'இப்ப அப்படியோ?' எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன். வீண் பிரச்சினைகளில் தலையை நுழைக்காமல் போகத்தான் நினைக்கிறேன். ஆனால் கொஞ்சம் எட்டிப் பாத்திட்டு போகலாமென்று மனம் சொன்னது.

...ன்ன செய்வது நானும் தமிழன் தானே. ...ட்ட நின்று 'எட்டிப்பார்க்கும்' புத்தி இல்லாமலா போகும்? 'கொலிஜ் ஐசீ' தந்த பாதுகாப்புணர்வுடன் மெல்ல சனக் கூட்டத்தை நெருங்குகிறேன் 'எட்டிப் பார்க்க......'

'சூரசம்ஹாரம்' நடந்திருக்குமோ தெரியாது...அந்த உடலில் தலையைக் காணவில்லை. பார்க்க சற்று அருவருப் பாகவும், அகோரமாகவும்தான் இருந்தது. யாரோ கொலை செய்து விட்டு தலையை யும் வெட்டிக்கொண்டு போயிருக்க வேண்டும். ஒரு முப்பது வயது மதிக்கத்தக்க உடல்தான். சற்று நேரத்திற்குள் சனக் கூட்டம் இரண்டாகப் பிரிகிறது. ஒரு இளம் பெண் ஓடிவந்து தலையில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்கிறாள்.

'ஐயோ....என்ர ராசா ஐயோ.....!'

மண்ணை வாரி தலையில் அடித்துப் புலம்புகிறாள். சனக்கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. அனேகமாக அவளுக்கு இருபத்தைந்து, இருபத்தேழு வயது இருக்கக்கூடும். இறந்தது அவளின் கணவன் தான் என்பதை அவளது அழுகைச் சொற்கள் பறைசாற்றின. "வாழ வேண்டிய வயதில் தாலியைத் தொலைத்து விட்ட எத்தனை விதவைப் பெண்கள் இப்படி இன்னும் அழுதுகொண்டே.....". நினைக்கையில் சற்று மனம் வலித்தது. காலத்தின் கோலம் பற்றி சிந்தித்துக் கொண்டே நகர முயல்கிறேன்.

அடுத்த 'புதினம்' அப்போது வந்தது. மீண்டும் நிற்கிறேன். அந்த வயதான அம்மா என்னைத் தாண்டித்தான் ஓடி வந்தா.

'ஐயோ...என்ர பிள்ளை...'

அவள் அழுத நிலையில் நின்று அவள் அந்த உடலின் தாய் என்பது புரிந்தது. இனி குடும்பமாக வந்து ஒப்பாரி வைக்கப் போகிறார்கள் என எண்ணிக்கொண்டு போக முயன்றபோது அடுத்த புதினம் மீண்டும் என் கால்களை நிறுத்திவிட்டது.

'யாரடீ நீ.....? என்ர பிள்ளையை..... கட்டிக்கொண்டு அழ' மோதல் உக்கிர மாக . எனக்கு ஒன்றும் புரியவில்லை....

'என்னவாம்...அண்ணை....?'

அடுத்தவரிடம் மெல்லக் கேட்கிறேன். "அந்த அம்மாவுக்கு பெட்டையை யாரென்டே தெரியாதாம்". எனக்கு தூக்கி வாரிப் போட்டது. "அந்த பொம்பிளையிட

புருஷன் முந்தி ஏதோ இயக்கத்திற்கு சப்போட்டாம்..... அந்த ஆள் கலியாணம் கட்டி ஒரு பிள்ளை இருக்குதாம். ஆனால் இந்தப்பெட்டை அவனின்ர மனிசி இல்லையாமே.....?" ஒருவேளை கள்ளக் காதல் கீதல் எண்டு....? ஒருவேளை அப்படியிருக்குமோ.....? நாலா பக்கமும் வந்த வார்த்தைகள் ஒன்றாக காதினுள் புகுந்தாலும் மூளைக்குள் ஏற மறுக்கிறது. அருகில் நின்றவாறே இருவரையும் மாறிமாறிப் பார்க்கின்றேன்.

இருவரும் அழுகையையும், சண்டையையும் விட்டபாடில்லை. ஒரு தர்ம யுத்தம் நடந்து கொண்டிருந்தது. சாவித்திரி ஒருபுறம் குந்திதேவி மறுபுறம்... இருவருக்குமே ஒரே கேள்வி.... இங்கு கிடப்பது சத்தியவானா...? இல்லை கர்ணனா....? என் மனதில் ஒரே கேள்வி.... இந்தக் குழப்பத்தை ஏற்படுத்திய நாரதர் யார்? கேள்விக்கு விடை காண முயன்றதில் நான் படித்த உளவியலும், அளவீடும் மதிப்பீடும் மறந்து விடும் போல இருந்தது. 'நாளை பரீட்சை வேறு' மனம் அறிவுறுத்த படித்ததையும் மனதில் நிறுத்திக் கொண்டே நடைபோடத் தொடங்குகின்றேன். சந்தியில் ஓட்டோபிடித்து 'டவுனுக்குப் போக.....' என்று கூற ஆட்டோ கிளம்பிவிட்டது. ஆட்டோக்காரன் பேச்சு வேறுவிதமாக இருந்தது. 'அனேகமா இது அங்காலப் பாட்டி செஞ்சதாத்தான் இருக்கோணும்.' அங்காலப் பாட்டி என்பது எதை நினைப்பது. இப்போதுதான் எத்தனையோ பாட்டிகள் வந்து மலிந்து போய்க் கிடக்கிறதே....! ஆ... என்று ஒப்புதலுக்காகச் சொல்லிக் கொண்டே என் சந்தேகத்தை அவரிடம் தெளிவு செய்து கொள்ள முயல்கிறேன்.

"அப்ப அந்த பொடிக்கு சொந்தக்காரர்?" "தெரியல்ல தம்பி...... அங்காலை வேப்பங்குளப் பக்கமும் ஏதோ ஒரு பொடி கிடக்காம்..... அதால சரியாக்கண்டு பிடிக்க முடியல்ல....."

'என் கடவுளே...' என் மனம் உள்ளே அழுதது. இப்படி வீதியில் கிடக்கும் எத்தனை சடலங்கள் இன்றைக்கு இவர்கள், நாளைக்கு யார்.... நாம் எப்போது.....? கண்டுபிடிக்க முடியாத அடையாளம் காணமுடியாத சடலங்களும் கொலைசெய்து விட்டு மறைந்துகொள்ளும் முகம் தெரியாத நபர்களும், தடுமாறும் உறவுகளும்.... வாழ்க்கையை நினைக்கையில் வெறுப்பாக இருந்தது. உலகியல் பற்றுக்கள் லௌகீக வாழ்க்கை அனைத்தும் கனவாகத் தோன்றியது.

வாழ்வாவது மாயம்... அது மண்ணாவது திண்ணம். மனம் சங்கமருவிய காலத்திற்கு திரும்பி விட என்னை அறியாமல் அறநெறிக் கருத்துக்களை நினைத்துப் பார்க்கிறேன். காரைக்கால் அம்மையாரும்.... பேயாழ்வாரும், பூதத்தாழ்வாரும் என் கண்முன் வந்து நின்று சிரிக்கிறார்கள். சமணமும், பௌத்தமும் மனதில் உயர்வாகத் தெரிய.... மகாவீரர், புத்தர் முதலியோர் மனக்கண் முன் தோன்ற மனதினுள் களப்பிரர் ஆட்சி நிலவுகிறது...... "தம்பி.....இங்க நிப்பாட்டவா?" சிந்தனை வயப்பட்டிருந்த எனக்கு சுய உணர்வு வர நிமிர்ந்து பார்க்கிறேன். வவுனியா...பஸ்தரிப்பிடம்.

"ஓமண்ணை....."

அவசரமாக இறங்கி காசைக் கொடுத்து விட்டு மெல்ல நகர்கிறேன். வவுனியா நகரம் தன்பாட்டில் இயல்பு நிலை மாறாமல்



சிரித்துக் கொண்டு தான் நிற்கிறது. ஒரு வேளை பழகிப்போன கொலைகளும் குண்டுவெடிப்புகளும், பிற நிகழ்வுகளும் சேர்ந்து நகரை பைத்தியம் ஆக்கி விட்டதோ.....? சிரிப்பவர்கள் இரண்டு பேர்.... ஒன்று ஞானி... மற்றது பைத்தியம்... வவுனியா நகரம் ஞானியா...? ஒருவேளை வாழ்வியல் யதார்த்தங்களும்.... தத்துவங்களும் புரிந்துகொண்டுவிட்டதோ... இல்லையேல் பைத்தியமா.....? எனது சிந்தனையின் போக்கை எண்ணிய வேளை எனக்கே சிரிப்பு வந்தது. அதேவேளை என் மீதும் எனக்கே சந்தேகம் வந்தது.

நான் ஞானியா...? பைத்தியமா...?

நான் சிரிப்பதை அருகில் நின்ற மற்றொருவன் கண்டுவிட்டான். இப்போது அவனும் என்னை ஒரு மாதிரியாகத்தான் பார்த்தான். அவனுக்கும் என்னைப் பற்றி சந்தேகம் வந்துவிட்டதோ என்னவோ....?

நேரம் கடந்து விட்டிருந்தது! சந்தியில் நேரம் வீண்விரயம் ஆகிவிட்டதால் வேலைகள் வேகமாக முடிக்கப்பட வேண்டியிருந்தது. அப்படி இப்படி, ஓடியாடி.... வேலைகளை முடித்தும் முடியாமலும் ஒருவாறு அலுவல்களை முடித்துக் கொண்டு திரும்பும் நேரம், சற்றுப் பசி எடுத்தது. அருகில் இருந்த சைவ உணவகத்தினுள் நுழைகிறேன். எனக்கு வாடிக்கையான இடம் அது. உள்ளே அருகில் அடுத்த மேசையில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் ஏதோ கொலை சம்பவம்

பற்றித்தான்..... ஏதோ தாண்டிக்குளப் பக்கம் கிளைமோர் வெடிச்சதாமே...?

ஆ.... மெய்யாவோ.....? எப்பவாம்.....? காலையிலயாம் கிட்டத்தட்ட ஆறு பேர் சரியாம்.... எனக்கு எரிச்சல் வந்தது ஓங்கி அறையலாமா என்று மனம் நினைத்தது. ஏன் அறைய வேண்டும். பாவம் அவர்களுக்கும் என்ன தெரியும் என் மனதின் சிந்தனைகளை.... கொலைச் செய்திகளையே கேட்டுகேட்டு மனம் வெறுத்தது.... அவர்களுக்கு அதைப் பற்றித் தெரியுமா...? கதை சூடுபிடித்து வளர்ந்து கொண்டே போனது. காயம், வைத்தியசாலை..... என்று ஏதோவெல்லாம் பேசிக்கொள்ள....சாப்பிடவும் பிடிக்கவில்லை...... எழுந்து காசைக்கொடுத்து விட்டு வெளியேறுகிறேன். சாப்பிட்டு சாப்பிடாமலும் அரைகுறையுடன் ஆட்டோ மீண்டும் பூந்தோட்ட சந்தியைக் கடக்கும் போது கூட்டம் கலைந்து விட்டிருந்தது. 'வொடி' எடுத்தாச்சுப் போல... என் கதைக்கு ஆட்டோக்காரர் காதுகொடுக்கவில்லை போலும்...அமைதியாக ஆட்டோ விரைந்தது. கல்லூரி நுழைவாயிலில் கையொப்பம் இட்டுவிட்டு உள்ளே நுழைகிறேன். உள்ளேயும் கதை சற்றுப்பரவிவிட்டது. என் சக தோழர்கள் சிலர் வினவினார்கள். என்ன மச்சான் சந்தியில் 'வொடி' கிடந்ததாம்...?

என் சுவாரசியமான அனுபவங்களை சற்று விபரிக்கின்றேன். ஆவென வாய்திறந்து கேட்டபடி சில வேடிக்கை நிகழ்வுகளை நினைத்து சிரித்தபடி சிலரும்...., நாட்டு நிலமையை எண்ணிக் கவலைப்படுவோர்

சிலரும்..., பயப்படுவோர் சிலரும்... என்ன சொல்வது..... நம் நாட்டுக்கதைகளெல் லாம் இப்போது நவரசம் சொட்டும் கதை களாக வருகின்றன. இரவெல்லாம் அந்த சிந்தனை மனதில் அகலாமல் அசை போட்டுக் கொண்டிருந்தன. அதை மறக்க முயன்ற போது தோல்வியே எஞ்சியது. இதயமும் இயந்திரம் போல தானாகவே இயங்கத் தொடங்கிவிட்டதாக ஓர் உணர்வு எனக்குள் மேலெழுந்தது. காலையில் கண்ட அந்த சாவித்திரியும், குந்திதே வியும் அழுத முகங்களுடன் மனக் கண்ணில் தோன்றுகின்றனர். நீண்ட போராட்டத்தின் பின்னர் எப்படியோ தூங்கிவிட்டேன் என்பது காலை எழுந்த் போதுதான் புரிந்தது. மறுநாள் காலை அனைத்தையும் இரவுடன் தொலைத்து விட்டு புதுப்பிறவியாய் வகுப்பறைக்குள் நுழைகிறேன். விரிவுரையாளர் கூறிய செய்தி மீண்டும் இரவு தொலைந்தவற்றைக் கொண்டு வந்தது. நேற்று தலையில்லாத 'வொடி'க்காக இரண்டு இனத்தவர்கள் சண்டை பிடித்துக்கொண்டார்களாம் இறந்தவரை அடக்கம் செய்வது தங்கள் முறைப்படி என்று.

கடைசியில் பிரேத பரிசோதனையின் போது அது வேறு இனத்து ஆள் என்று தெரிய வந்ததாம். எதற்காக இனவாதம்? எதற்காக யுத்தம்? எதற்காக சாவு? யார் இறப்பது? ஏன் இத்தனையும்! ஒரு நிமிடம் சிந்தித்தேன்...

எல்லாமே..... ■

---



செல்விசுப்பிரமணியம் சிவதர்சினி

■ பெயர் : செல்வி.சுப்பிரமணியம் சிவதர்சினி

■ உணவுத் தொழினுட்பப் பிரிவு, 1ம் வருடம். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

■ கவிதைத் துறையில் ஆர்வம்.


## நட்பெனும் சங்கிலி

சிவதர்சினி

உன் புன்னகை என் மனதை
பூப்பறிக்க வைக்கிறது.
உன் பார்வை என் நிழலில்
பக்குவமாய் இருக்கிறது.
உன் அன்பு என் கனவில்
ஆழமாய் உதிக்கிறது.
உன் நினைவு என் மனதில்
என்றுமே வசிக்கிறது.
நட்பு எனும் சங்கிலியே நம்மை
ஒன்றாய் இணைக்கிறது.
நட்பு என்றால் என்ன என்று
விளக்கம் கேட்காதே.
சத்தியமா அது தெரியாது - அதைச்
சொன்னாலும் புரியாது.



# இலங்கை மாணவன் எழுதிய கடிதத்திற்கு இந்திய ஜனாதிபதி பதில்



பெயர் : கு.பார்த்திபன்
பாடசாலை : மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.
வயது : 16
தரம் : 11
முகவரி : 18, றொசைறோ வீதி, மட்டக்களப்பு.

நான் Dr.A.P.J.அப்துல் கலாமிற்கு கடிதம் அனுப்பும் போது எனக்கு வயது 13 ஆகும். அப்போது நான் தரம் 8 இல் கல்வி கற்றேன்.
-கு.பார்த்திபன்

## Dr. A.P.J.ABDUL KHALAM,

K.Parthipan,
18, Rosario Lane,
Batticaloa,
Sri Lanka.

13.07.2005.

Dear Sir,

My Name is Parthipan. Sir, I live in a city named Batticaloa which is east coast to Sri Lanka. I' am studying in 10th standard at St.Michael's College which is the biggest boys' school in our city. I' am really unable to believe that I' am writing to the Indian President.


You are the only person I have admired from my small age sir. I have read many books about you sir. My father always speaks about the great deeds of you. He gave me the interest to me to get to know about you. So I have read your autobiography and your stories behind your success. I know that you are a space scientist sir. I' am also very much

interested in reading about space exploration. Most of your thoughts and poems have impressed me lot sir. Even though you are a great person in the world, I like your simple ways sir. I got across your address while I was reading an Indian Magazine sir. So when I saw your address, it gave me a hope that I can write a letter to you.

I' am eagerly expecting a reply from you sir. Most of my friends discouraged me that writing a letter to a famous person is impossible for guys like us. So please don't neglect my letter sir. I will be very pleased if I receive a reply with your own handwriting and with your autograph sir.

So I' am ending this letter with the strong hope of receiving a reply from the Indian President.

With Thanks and Regards,
**PARTHIPAN**






# தமிழ்க் கவிதையின் புது வடிவம்

கவிஞர் க.கலைசலிங்கம்

கரிகாற் பெருவளவன் அணை கட்டி வரம்பிட்டபின், காட்டாறாக ஓடிய காவிரிப் பெண் அடக்கத்துடன் அழகு நடை பயின்றாள். அவளின் நடையழகும் வளமும் நளினமும் உள்ளத்தைத் தொடுவன. இவற்றைக் கண்டு களிக்க முடியாதவர்கள் காட்டாற்றின் ஓட்டத்தில் அழகும் வளமும் காண முயலலாம். தமிழ்க் கவிதைத் - துறையில் நடக்கும் முயற்சிகள் சில இத்தகையனவே.

## புதுமை என்ன? கவிதை என்ன?

மொழி கருத்துப் பரிமாறலுக்கான ஒரு சாதனம். கூறவேண்டிய கருத்தைச் சரிவரக் கூறினால் மொழியின் பயன் நிறைவு பெறுகிறது. சொல்லுகிற பாங்கு கரடுமுரடாக இல்லாமல் இனிமையாக இருந்தால் நயமுண்டு. வெறும் வசனமாக இருந்த மொழி அடுக்குத் தொடராக அமைந்து, எதுகை மோனைகளுடன் சிலவேளைகளில், கற்பனையும் கலந்து வெளிப்பட்டால் அதுவே கவிதையாகிறது.

"வானத்துச் சந்திரன் மலைமேலே ஒளி வீசுகிறது
மலை முகட்டில் தென்றல் வீசுகிறது"

என்பது வசன நடை. இதுவே கவிதையாகும் பொழுது,

"திங்கள் முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை"

என்று வெளிவருகிறது. இதிலுள்ள அழகும் நயமும் கற்பனை வளமும் வசனத்தில் இல்லை.

இதற்குப் பதிலாக இன்றைய புதுக் கவிதைப் பாணியில் பின்வருமாறு எழுதலாம்.

"மலை முகட்டின் மேலே
துகில் போர்க்கும் சந்திரனொளி
தென்றல் என்ற துச்சாதனன்
துகிலுரியாமல்
தொட்டு விளையாடுகிறான்"

இங்கே வசனங்கள் துண்டு துண்டாக எழுதப்பட்டுள்ளன. கற்பனை ஜனரஞ்சகமானதென்று கூறப்படுகிறது. சிந்தனையின் வெளிப்பாட்டை வனப்புமிக்க வசனங்களாக எழுதிக் கவிதையாகக் காட்டும் முயற்சியே இது. இதில் புதுமை என்ன? கவிதை என்ன?

## பிறமொழிக் கவர்ச்சி :

கவிதை தமிழ் மொழியில் வளர்ச்சியடைந்ததைப் போல் வேறெந்த மொழியிலும் வளர்ச்சியடையவில்லை. அதன் வளர்ச்சியில், வெண்பா, ஆசிரியப்பா, விருத்தப்பா, கலிப்பா எனப் பலவினங்கள் தோன்றின. அவற்றுள்ளும் பல வகைகள். ஓசையின் அளவும் ஒழுங்கும் பற்றிப் பிரிந்து, உள்ளத்துணர்வுகள் நிகழ்வுக

ளின் வெவ்வேறு கூறுகளை உணர்த் துவன இப் பா வகைகள். பிற்காலத்தில் கோவைகள், அந்தாதிகள், சிலேடைகள் என்று பல தோன்றின. இவையெல்லாம் ஒன்றையொன்று விஞ்சிய இனிமையும் சிறப்பும் கொண்டவை. எதுகை, மோனை சிறந்த எழிற் கவிதைகளும் சந்தமிகு சிந்து வகைகளும் தமிழ் மொழியில் உள்ளது போல் வேறெந்த மொழியிலும் இல்லை. இவற்றின் சிறப்பு ஒவ்வொன் றும் அந்தந்தக் கவிதை இன வரம்புக் குள் அமைந்திருப்பதே.

இன்று எடுத்ததற்கெல்லாம் பிற மொழிகளிலிருந்து, குறிப்பாக ஆங்கிலத் திலிருந்து உதாரணம் காட்டுவதும் ஒப்புநோக்குவதும் வழக்கமாகிவிட்டது. எத்துறையிலும் ஆங்கிலத்தை உயர்ந்த இடத்தில் வைத்துத் தமிழில் உள்ள வற்றை நோக்குவதைத் தமிழறிஞர் கூடப் பெருமையாகக் கொள்கின்றனர். வணிகம், விஞ்ஞானம், மருத்துவம் முதலிய துறைகளில் ஆங்கிலம் பெற்ற வளர்ச்சியைத் தமிழ் மொழி பெறவில்லை. ஆனால் பக்தித் துறையில், கவிதைக் கலையில், தமிழ் மொழியின் இடம் ஆங்கிலத்தைவிட மிகவும் உயர்ந்ததென் பதைப் பலர் எண்ணுவதில்லை. இதனை உணராமலும் அறியாமலும் பிறமொழிக் கவிதைகளைப் போற்றி அவற்றுடன் தமிழ்க் கவிதைகளை ஒப்பிட முந்துவ தும், அவைபோல் எழுத முற்படுவதும் அறியாமையின் அல்லது தாழ்வு மனப் பான்மையின் விளைவென்றே கூற வேண்டும்.

### இயலாமையின் வெளிப்பாடு :

எதுகை, மோனையுடன் இலக்கண வரம்புக்கு உட்பட்டு எழுதப்பட்டதை மரபுக் கவிதையென்றும், இலக்கண வரம்பு மீறி வெளிவந்ததைப் புதுக் கவிதை என்றும் இன்று வகைப்படுத்து வதுண்டு. முன்பு வசன கவிதை என்று கூறப்பட்டவைக்குப் புதுக்கவிதை எனப் பெயரிட்டு அறிமுகம் செய்ததில் சி.சு.செல்லப்பாவின் **'எழுத்து'** இதழ் முக்கிய பங்கு வகித்தது. ஆரம்ப காலத்தில் இதனை வரவேற்ற ஒரு பேராசிரியருடன் இதுபற்றி உரையாடிய பொழுது, அவர் இலக்கண மரபுக்குட் பட்டு எழுத எல்லோராலும் முடியாது. அவர்களால் தமது உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு ஏற்றதொரு சாதனம் புதுக்கவிதை என்று விளக்கமளித்தார். இதுவே உண்மை. கவிதை எழுத முடியாதவருக்குத் தம் சிந்தனை உணர்ச்சி வெளிப்பாட்டுக் களமாகப் புதுக் கவிதை முயற்சி தொடங்கியது. உரை வீச்சு என்றோ, வேறு பெயரிலோ இதனை அழைப்பதே பொருத்தமாகும். இதைவிடுத்து, கவிதையல்லாத ஒன் றுக்குப் புதுக்கவிதை எனப் பெயரிட்டுப் போற்றுவது இயலாமையின் வெளிப் பாடேயன்றி வேறெதுவும் இல்லை.

புதுக் கவிதை முயற்சியை நியாயப் படுத்த, இலக்கணத்தை உடைத்து வெளிவருவது– மரபு போற்றும் பழைய பத்தாம் பசலித்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க எழுந்தது– கவிதையில் புது



உத்தி – பரிசீலனை என்றெல்லாம் கூறப் பட்டது. இன்றோ இலக்கணத்தை மீறி வெளிவந்த புதுக்கவிதைக்கு இலக் கணம் தேடும் முயற்சி நடக்கிறது.

நல்ல சங்கீதத்தைக் கேட்டு மகிழ முடிந்தவருக்குத்தான் இராகங்களின் விதம் விதமான இனிமையையும் நளி னத்தையும் அனுபவிக்க முடியும். ஒரு இராகத்தில் அமைந்த பாட்டு, இராக வரம்பை மீறினால், அல்லது இராக முறிவு ஏற்பட்டால், சங்கீதம் சுவை குன்றிக் குழறுபடியாகிவிடும். இது தமிழ்க் கவிதைக்கும் பொருந்தும். எந்தக் கவிதையும் ஒரு பாவினத்தில் அமைந்தால் இனிமை பெறும்; எழில் கூடும். பாவினத்தின் வரம்பு மீறினால் அல்லது சீர் ஒழுங்கு பிழைத்தால் அது கவிதை வடிவம் இழந்து தடம் புரண்டுவிடும்.

### எண்ணிக்கை அளவுகோலா?

இன்று புதுக்கவிதை எழுதுபவர் பலர். புதுக்கவிதை தாங்கிவரும் பத்தி ரிகைகள் சஞ்சிகைகள் பல. இதனால் புதுக்கவிதை போற்றப்பட வேண்டியது; பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது; சிறப்பு டையது என்று கூறலாமா? இராக வரம்பை மீறிவரும் பெரும் ஓசைக ளையும் சினிமாப் பாடல்களில் வரும் ஓசை ஒழுங்கற்ற பாடல்களையும் விரும் பிக் கேட்பவர் இன்று பெருகிவிட்டனர். இதனால் பண்ணிசையோ சாகித்திய சங் கீதமோ சிறப்பிழந்துவிட்டதாகக் கூற முடியுமா? இன்றைய சினிமாத் துறை யில் அடிதடி சண்டைகள் மலிந்த கீழ்த் தரமான காட்சிகளைக் கொண்ட படங்க ளைப் பலரும் விரும்பிப் பார்க்கின்றனர். எளிமையான கலையழகு மிக்க படங் களைப் பார்ப்பவர் மிகவும் குறைவா கவே உள்ளனர். இதனால் சத்தியஜித்ரே போன்றோரின் படங்களைவிட இவை சிறப்புமிக்கவையெனக் கொள்ளலாமா? கலைமிகு படைப்புக்களைப் பார்த்து மகிழவும் அவற்றை ஆக்கவும் நுண்ணிய கலையுணர்வும் பயிற்சியும் தேவை.

### பொருளும் வடிவமும் :

மரபுக் கவிதைகள் விளங்க முடி யாத பழைய இலக்கியங்கள். பண்டி தர்களுக்கு மட்டும் ஏற்றவை. பாமர மக்கள் படிப்பதற்கு முடியாதவை என் பது சிலரின் கருத்து. கவிதையமைப்பு வேறு, பொருள் வேறு என்பதைப் பலர் சிந்திப்பதில்லை. பொருள் விளங்காமை யைக் கவிதையமைப்பின் குறைவாக மயங்குகிறார்கள்.

சீவக சிந்தாமணியில் ஒரு காட்சி. அரசக் குழந்தையொன்று சுடுகாட்டில் பிறக்கிறது. இதைக் கூறும் பாடல் :

**"வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார்**
**ஈமம் விளக்காக**
**ஒவ்வாச் சுடுகாட் டுயர் அரங்கில்**
**நிழல்போல் நுடங்கிப் பேயாட**
**எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக்**
**கூகை குழறிப் பாராட்ட**
**இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ**
**மன்னற் கியல்வேந்தே"**

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது, பொருள் விளங்காத பண்டிதத் தமிழாகவும் பண்டிதருக்குரிய பாடலா கவும் தோன்றும். அரண்மனையில் பிறந்தால் இன்னிசை வாத்தியங்கள் முழங்கும். தீபாலங்காரங்கள் இருக்கும். நாட்டிய நடனங்கள், பாராட்டுக்கள் இடம்பெறும். ஆனால் கொடிய வாயு டைய நரிகளின் ஊளைச் சத்தமும், இறந்தவரின் சமத் தீயும், பெயாட்டமும் கூகையின் சத்தமும் நிறைந்த சுடுகாட் டில் பிறப்பதா அரச குழந்தைக்கு இயல்பு? என்று பொருள் விளங்கும் போது பாடலில் காணும் அவல நிலை உள்ளத்தை உருக்குகிறது.

இந்தப் பாட்டு வடிவத்திற்கும் "அம்மா மெத்தப் பசிக்கிறது. அப்பம் எனக்கு இப்போ தா" என்ற வடிவத்திற் கும் எத்தகைய வேறுபாடும் இல்லை. பொருள் புரியாதபோது கவிதை வடிவ மும் புரியாததாய், எழுத முடியாததாகத் தோன்றுகிறது. பொருள் புரிந்த கவிதை வடிவம் முயன்றால் கை கூடும்.

எம்மில் பெரும்பாலானோர் தமிழ்ச் சொற்களின் பொருளை அறிய முயல்வ தில்லை. பொருள் புரியாத தமிழ்ச் சொற் களுக்குப் பதிலாகக் கைக்கெட்டிய எந்த மொழிச் சொற்களையும் கையாள முந்துகிறோம். தமிழில் எப்படியும் பேச லாம். தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற நிலை. இந்த இழி நிலை பிற மொழியில் இல்லை. பொருள் புரியாத ஆங்கிலச் சொல்லைக் கண்டால் அக ராதி புரட்டுவதும், அது தமிழ்ச் சொல் லாக இருந்தால் ஒதுக்கித் தள்ளுவதும் எம்மவருக்குப் பழக்கமாகிவிட்டது. இது உலகம் தழுவிய பண்பா? அல்லது தாராள மனப்பான்மையா?


### புது முயற்சி :

தமிழ்க் கவிதைத் துறையிலே புது முயற்சி, புது உத்தி, பரிசீலனை, விஞ் ஞான நோக்கு என்றெல்லாம் புதுக் கவிதை பற்றிக் கூறப்படுகிறது. விஞ் ஞான ஆராய்ச்சிக்கும், பரிசீலனைக்கும், முந்தைய முடிவுகள் பற்றிய அறிவு மிக மிக அவசியம். இந்த அறிவில் லாமல் செய்யும் எந்தப் பரிசீலனையும் பலனளிக்காது. இது கலைத்துறைக் கும் பொருந்தும்; கவிதைக்கும் பொருந் தும். பாரதியும் பாரதிதாசனும் தமிழ்க் கவிதையுலகில் புதுமை செய்தார்கள். பழந்தமிழ்க் கவிதைகளில் அவர்களுக் குள்ள அறிவும் ஈடுபாடும் இதற்கு உத வின. அவர்களின் கவிதைகள் இலக் கண வரம்பை மீறியதாகக் கூற முடியாது. ஆனால் புதுமைமிக்கவை. அவற்றின் நடையழகும் கருத்தாழமும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உள்ளத்தைத் தொடுவன; நீடித்து நிற்பன. இன்றைய புதுக் கவிதைகளில் எத்தனை மனதில் நிற்கின் றன? பார்ப்பதற்கு எழுதப்பட்ட வையே யன்றிக் கேட்பதற்காக எழுந்தவை போல் தெரியவில்லை.



இன்று நாம் எத்தகைய பயிற்சியு மில்லாமல் கவிதை எழுத முற்படுகிறோம். கவிதை பற்றி அறிய வேண்டுமென்ற ஆர்வமுமில்லை. எந்தத் துறையிலும் முயற்சியின்றிக் குறுக்கு வழியில் குறு கிய நேரத்தில் பலனை எதிர்பார்க்கி றோம்; பாராட்டை விரும்புகிறோம். இதுவே இன்றைய எமது பலவீனமும் எதிர்பார்ப்புமாக இருக்கின்றன.

காவிரியின் அழகும் வளமும் கண்ட புலவன் முன்பு நெஞ்சையள்ளும் கவிதை படைத்தான். காவிரி இன்று நீர்வற்றி எழில் குன்றி நலிவுற்றுச் செல்வதைப் பலரும் காண்பதில்லை. இளங்கோவடி கள் இறந்த காலத்தில் எழுதிய "நடந்தாய் வாழி காவேரி" என்ற வரி தமிழ்க் கவி தையின் இன்றைய நிலையைப் பிரதி பலிக்கிறதா? தமிழ் நெஞ்சங்களில் இது பற்றிய எண்ணம் துளிர்விடுமா? ■



## பறவைகள்

ஒரு சுழிகாற்று!
சருகுகளும்
சில நிமிடம்
பறவைகள்.

ஏ.ராஜா மோகனேஸ்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# நா டு எ ன் ன நா டோ?

நாடு என்ன நாடோ - நம்மை
நாடுவதெல்லாம் தினமும் கேடோ?

குடித்துறையோ கதிகலங்கிக்
காப்பகத்தில் தஞ்சம்! - தினம்
படியளக்கும் நிவாரணமோ
பதுங்கிவரும் கொஞ்சம்!
தடித்தனங்கள் இருக்குமட்டும்
தீர்ந்திடுமோ பஞ்சம்? - துயர்
படித்தரமே நம் வாழ்வில்
பரவலாக மிஞ்சும்!

பாதையிலே போகையிலே,
படையினரின் மறியல் - குடி
போதையிலே சோதனையோ
பகலிரவாய் வெறியில்!
சதையெல்லாம் எடுத்துரைத்தால்
இங்கிதமா கிடைக்கும்? - கொடும்
வாதையினால் எங்களது
வலமிடமே புடைக்கும்!
— நாடு என்ன நாடோ - நம்மை
நாடுவ தெல்லாம் தினமும் கேடோ?

சந்தியிலே எமகாதன்
வெள்ளவேனில் அலைகிறான் - அவன்
சந்தடியில் மனம் பதைத்துச்
சீமானோ குலைகிறான்!
இந்தநிலை, இழிவு கொலை
இடர்மலியும் நாட்டில் - நம்
சொந்தநலச் சுகவளங்கள்
சுவைதருமோ வீட்டில்?

கட்ட(ப்)படும் ஏழையர்க்குக்
காலமில்லை சாமி - அவர்
பட்டதுயர் நீங்கிடவே
பரிந்திடுமா பூமி ?
நட்டமுடன் கையேந்தி
நாடுபடும் பாடு - இனி
விட்டகல விளைந்திடுமோ
வயல்வெளியும் காடும்?
— நாடு என்ன நாடோ - நம்மை
நாடுவ தெல்லாம் தினமும் கேடோ?

- திராவூர் அலைக்தர் -



செங்கதிரோன் எழுதும்



# விளைச்சல்

## 6 குறுங்காவியம்

(கவிஞர் நீலாவணனின் 'வேளாண்மை'க் காவியத்தின் தொடர்ச்சி...)

### "சந்தோஷம்" முடிந்து சாப்பாட்டுப் பந்தி

வடிவேலும் விடுவானா போய்
வார்த்துவிட்டு வந்து நின்றான்.
'அடி சக்கை' - அமர்க்களந்தான்
அவனும்தான் ஆடுகின்றான்!
"விடுமச்சான்!... போதும் இனி....
விடு" - அழகர் வேண்டியதால்
விடுபட்டார் கந்தர் பின்
வீட்டுக்குள் சென்று வந்தார்.

கைகழுவி வாய் அலம்ப
கந்தப்பர்' செம்பு தந்து
பையவேதான் கூட்டிப்போய்
பந்தியிலும் இருப்பாட்டி
"ஏய்பொன்னு! கொண்ணன்கா!
இலைபோடு! எல்லாமே
வைநல்லா. வை! வை! வை!
வடிவாகக் கவனி!!" என்றார்.

அண்ணனின் அருகில் மெல்ல
அமைதியாய் வந்த பொன்னு
"என்னண்ணா! இன்று நல்லா
எடுத்திட்டா போல" என்றாள்.
"கொண்ணனுக்கென்ன இன்று
கொண்டாட்டம்தானே" என்று
கண்ணாலே கனகம் பேச
களிப்பிலே கந்தர் ஆழ்ந்தார்.

பந்தியில் மற்ற ஆண்கள்
பகிடிகள் கதைத்தவண்ணம்
குந்தினர்; பெண்கள் ஓடி
குசினிக்குள் சோறு கொண்டு
வந்தனர்; வடிவாய் எல்லாம்
வைத்தனர்; வழமைபோல
பந்தியின் நடுவில் பெத்தா
பார்வதி வைத்தாள் சத்தம்!


"சோறெடுத்து வா! சொர்ணம்!
சுண்டலையும் கொண்டு வாகா!
ஆரெடுக்கப் போனா பார்....!
ஆட்டிறைச்சிக் கறியை. தண்
ணீர் எடுத்து வை வள்ளி!
நீளத்தில் பாயை விரி !
ஊர் கதைக்கப் போடாகா!
உண்டெனவே எல்லாம் வை"

'உப்' பென்று கேட்டார்கள்;
"உறைப்பெங்கே?" மற்றொருவர்.
'சப்பித்தான் தின்னநல்ல
சதையோடு எலும்பிறைச்சி"
"தப்பாமல் தம்பிக்கு... வா!
தயிர். சீனி போடு தங்கம்"
"அப்பாடா! நல்லவெட்டு.... ஆ!
ஆணத்தில் கொஞ்சம் ஊத்து"



ஆம்பிளைப் பந்தி வைத்து
அடங்கிய பின்னர் பொன்னு
செம்பினைக் கனகம் கையில்
சிறப்பாகத் தந்து மற்ற
பொம்பிளைத் தத்தியாரைப்)
பொறுப்பாக நின்று எந்த
வம்பேனும் வந்திடாத
வண்ணம்நல் பந்தி வைத்தாள்.

-இன்னும் விளையும் -



# "சிரி" கதை



இறந்து போன ஒருவரின் உடல் ஆடை அலங்காரம் செய்யப்பட்டு பிரேதப் பெட்டிக்குள் தயாராக இருந்தது. இறந்தவரின் மனைவி நன்கு பார்த்துவிட்டுப் பிரேதப் பெட்டிக் கடைக்காரரிடம் சென்னார்.

"எல்லாம் சரிதான். ஆனால் வெள்ளை உடுப்புப் போட்டிருக்கிறீர்களே.." என்று.

"அதனால் என்ன?"

"வேறொன்றுமில்லை. எனது கணவருக்கு நீல நிற உடுப்புத்தான் பிடிக்கும்" என்றவர் அந்தக் கடையில் அலங்காரம் செய்யப்பட்டிருந்த இன்னொரு பிரேதத்தைச் சுட்டிக்காட்டிச் சொன்னார், "அதோ! அந்தப் பெட்டியில் ஒருவர் கிடக்கிறாரே, அவர் அணிந்திருப்பது போன்ற நீல நிற உடுப்புத்தான் என் கணவருக்குப் பிடிக்கும்" என்று.

"அவ்வளவுதானே! கொஞ்ச நேரம் வெளியே போய் இருங்கள். மாற்றி விடுகிறேன்" என்றார் கடைக்காரர்.

ஐந்து நிமிடங்களின் பின்னர் அந்தப் பெண்ணை உள்ளே அழைத்தார். அங்கே தனது கணவரின் சடலத்துக்கு நீலநிற உடுப்பும், மற்ற சடலத்திற்கு வெள்ளை நிற உடுப்பும் அணிவிக்கப்பட்டிருந்தன. அந்தப் பெண் பிரமித்துப் போனாள்.

"எப்படி இவ்வளவு விரைவாக உடைகளை மாற்றினீர்கள்?" என்று கேட்டார்.

"உடைகளை மாற்றவில்லை, தலைகளைத்தான் மாற்றிவிட்டேன்" என்றார் கடைக்காரர்.

- கோபி -

**சிறுகதை**

# கவசம்

- இராசி -



நேரம் காலை ஏழரை மணி. பாடசாலை மாணவ மாணவிகள் அவசர அவசரமாக பாட சாலைகளுக்கு ஓடிக்கொண்டிருக்கின்றனர். கூடவே பாக்கியமும் அவள் மகன் வேலுவும் ஓட்டமும் நடையுமாக முதலாளி முருகேசுவின் வீட்டை வந்தடைகின்றனர். பாக்கியம் உள்ளே போக வேலு விளையாடிக் கொண்டிருக்கிறான். சிறிது பின் வெளியே வந்த பாக்கியம் வேலுவிடம் "டேய் வேலு, விளையாடியது போதும். இந்த வளவுக்குள்ள கிடக்கிற புல் பூண்டுகள புடுங்கி குமிச்சுவை. நான் சட்டிபானையைக் கழுவி வைச்சிட்டு வாறன் என்ன?" என்று தன் ஏழு வயதான மகன் வேலுவிடம் சொல்லிப் போட்டு மீண்டும் வீட்டுக்குள் போகிறாள். வேலு சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிவிட்டு ஓடியோடி புல் பூண்டுகளைப் பிடுங்கத் தொடங்கினான்.

பாக்கியம் சட்டிபானைச் சாமான்களைகளையும், கோப்பை பீங்கான்களையும் கழுவி கவுட்டு வைத்துவிட்டு, உடுத்திருக்கும் சேலைத் தலைப்பில் கையைத் துடைத்தபடி வெளியே வருகிறாள். வந்தவள் ஈர்க்குக் கட்டை தேடியெடுத்து வாசல் வளவை கூட்டத்தொடங்கினாள். அப்பொழுது வெளியே வந்த முருகேசுவின் மனைவி கமலம் "டீயேய்! பாக்கியம், கெதியாகக் கூட்டிப்போட்டு மகனையும் அழைச்சிட்டு வா, பழைய சோறு நாறிப்போகும்" என்று கூறியதும் "சரியக்கா, இதோ வாறம்" என்றவள் மகனைப் பார்த்து "மகன் வேலு, புடுங்கினதை அள்ளி மடுவுக்குள்ள போட்டுட்டு கைகாலக் கழுவிட்டு வா" என்றவாறு சரசரவெனக் கூட்டி குப்பைகளை அள்ளி மடுவுக்குள்ள கொண்டு போட்டாள். பின் அவளும் பைப்படிக்குச் சென்று கைகால்களை அலம்பிக் கொண்டு பின் விறாந்தைக் கட்டில் பொடியனோட போய் இருந்தாள். அவ்வேளை இரண்டு பழைய தகட்டுக் கோப்பைகளில் கமலம் பழையசோறும் அதோடு தேங்காய்ப் பூவும் கொண்டுவந்து வைத்தாள்.

"உப்பையும் கொஞ்சம் கொண்டு வா அக்கா" என்ற பாக்கியம் விறாந்தை மூலையில் இருந்த கொத்துக் கோப்பையை எடுத்து மகன் வேலுவிடம் கொடுத்து "இந்தா தம்பி கொண்டு போய் பைப்புல தண்ணி எடுத்து வா" என்று அனுப்புகிறாள். வேலு தண்ணீரைக் கொண்டு வரவும், கமலம் உப்புக்குவளையைக் கொண்டு வரவும் சரியாகயிருந்தது. பாக்கியம் பரபரவெனச் சாப்பிட்டாள். இவர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த கமலம் "ஏண்டீ பாக்கியம் இப்படி அவசரம் அவசரமாகச் சாப்பிடுறாய்" என்று கேட்க, நிமிர்ந்த பாக்கியம் புரைக்க அடிக்க தலையில் தட்டியவாறு "அமிர்தமக்கா வீட்டுக்கு போகனுமக்கா நேரமாயிட்டு தேடுவாவு. அதான்—" என இழுக்க "சரி, சரி மேலும் புரைக்கடிக்கப் போகுது. சாப்பாட்டு நேரத்துல யமனும் வரப் பயப்படுவான். ஆறுதலாகச் சாப்பிடு" எனக் கூறியவாறு கமலம் உள்ளே போகிறாள். பாக்கியமும் வேலுவும் சாப்பிட்டு முடித்ததும் பைப்படிக்குச் சென்று கோப்பைகளைக் கழுவி அவற்றிலே தண்ணீர் மொண்டு குடித்துவிட்டு கோப்பைகளை வைத்தனர். பின் பாக்கியம் தன் சேலைத் தலைப்பாலையும், வேலு அவன் சேர்ட்டின் கீழ்ப் பாகத்தாலையும் வாய்களையும், கைகளையும் துடைத்தனர்.

கமலம் அரிசி, தேங்காய் போடப்பட்ட ஒரு "சொப்பிங்" பையைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து பாக்கியத்திடம் கொடுத்ததும், அதை வாங்கி எடுத்த பாக்கியம் "சரியக்கா, நாளைக்கு காலையில வாறன்" என்று மகனின் கையைப் பிடித்துக் கொண்டு பக்கத்து வீட்டு அமிர்தம் வீட்டுக்குப் போகிறாள்.

அமிர்தத்தின் கேற் கதவைத் திறந்து உள்ளே போனதும் காத்துக் கொண்டிருந்த அமிர்தம் "என்னடீ பாக்கியம் வெயிலேறிப் போயிட்டு ஆறுதலாக ஆடி அசைஞ்சு வாறாய்" "இல்லக்கா வந்து—" "சரி, சரி வந்து வேலையைப் பாரு" சொல்லியவாறு உள்ளே போகிறாள் அமிர்தம். மகனை ஒரு இடத்தில் இருப்பாட்டி வைத்து விட்டு கடகடவென தொட்டாட்டு வேலைகள் அனைத்தையும் செய்து முடித்த பின் ஆறுதலாகப் பின் விறாந்தக் கட்டில் வந்து அமர்ந்தாள். வேலு கல்லுப் பொறுக்கி விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது வந்த அமிர்தம் "இந்தா இதில நூறு ரூபா இருக்கு எடுத்துக்க" என்றவள் பக்கத்திலிருந்த பையில் அரிசியையும் தேங்காயையும் கண்டு "என்ன மத்தியானச் சாப்பாட்டுக்கு எல்லாம் 'றெடி'யாயிட்டுப் போல" எனக் கேட்டாள். "அப்படியில்லக்கா, இது கமலமக்கா தந்தது. இனித்தான் கறி புளி தேடணும்" என நெளிந்தாள்.

"அது சரி பாக்கியம், நானும் கேட்க்கோனும் கேட்க்கோனும் என்றிருந்தநான். எப்ப பார்த்தாலும் இப்படி ஊத்த உடுப்போடதானே திரிகிறாய். தலையும் ஒழுங்காக வாரமாட்டாய். என்ன விஷயம்?" அமிர்தம் கேட்க "அக்கா உடுப்பில தான் அழுக்கே தவிர உடலிலையோ, உள்ளத்திலையோ அழுக்கு இல்ல. இப்படி அழுக்காகத் திரிமிறதிலையும் ஒரு காரணம் இருக்கு" எனச் சிரித்தாள்.

"அப்படி என்னடி பெரிய காரணம்?" நாடியில கைவைத்தவாறு அமிர்தம் கேட்டாள். "இருக்கக்கா, காரணம் இருக்கு. இந்தக் காலத்தில என்னைப் போல ஒரு பெண் சுத்தமா உடுத்தி, சீவிச் சிங்காரித்துத் திரிந்தால் ஊரிலயுள்ள போக்கிரிகள் சும்மா விடுவானுகளா? சொல்லு பார்ப்பம். அதுதான் இப்பிடி" கண் கலங்கக் கூறுகிறாள். "ஆமாண்டீ, நீ சொல்லிறதிலையும் உண்மை இல்லாமல் இல்லை, காமுகருடைய கண்களுக்கு நாம உறுத்தாம இருப்பதுதான் நமக்குப் பாதுகாப்பு" இது அமிர்தத்தின் அர்த்தமுள்ள போதனை.

"இல்லாட்டி இப்படி தெருத்தெருவாகத் திரிமிற என்ன ஒழுக்கமாக வாழ விடமாட்டானுகள்" ஆதங்கப் பட்டாள் பாக்கியம். "அது சரி, நீ ஏன் இப்படி அங்கயும், இங்கயும் அலைந்து திரிமிறாய்?" அனுதாபத்தோடு அமிர்தம் கேட்டாள். "அதையேன் கேட்கிறாயக்கா, நான் இந்த ஊரில்லக்கா. சொந்த ஊர் வளத்தாப்பிட்டி. சின்ன வயசில அப்பன் செத்துப்போயிட்டார். நாங்க ஒரு ஆணும் பெண்ணும் இரண்டு பேர். மூத்தவன் அண்ணன் தியாகு. அவனுக்கு பத்து வயதில பெரியவொரு வருத்தம் வந்து இறந்து போனான். அம்மாதான் கஷ்டப்பட்டு வேலை செய்து வளத்தவ" சற்று நிறுத்தினாள்.

"அப்படியென்றால் காரைதீவுக்கு எப்படி வந்தநீ" கதையைத் தொடரத் தூண்டினாள் அமிர்தம்

"சொல்லுறனக்கா. தேங்காய் ஆயிற கணபதி உங்கட ஊர்தானே. அவர்தான் என்ட புருஷன். வளத்தாப்பிட்டிக்கு வந்தபோது என்னைக் கண்டு அவருடைய சொந்தக்காரர் பொன்னையாவ தூது அனுப்பி அம்மாவைச் சம்மதிக்கவச்சு என்னைக் கலியாணம் கட்டினவர். பிறகுதான் தெரியும் ஆள் பெரிய குடிகாரனென்று. என்ன செய்யிற மரம் ஏறுவதுதான் தொழில். உங்களுக்கும் அவரைத் தெரிந்திருக்குமே" பாக்கியம் கூறி மூச்சுவிட்டாள். "ஓம்! ஓம்! எங்கட வீட்டையும் வந்து தேங்காய் ஆஞ்சிருக்கிறான். இப்ப ஒரு ஏழெட்டு மாதமாக ஆளைக்காணல்ல" இது அமிர்தம்.

"அவர் செத்து இப்ப நாலு மாசமாச்சு. குடிச்சுக் குடிச்சு ஈரல் அவிச்சுப் போட்டதாம். வளத்தாப்பிட்டி வளவ வித்தது தான் மிச்சம். வருத்தத்தை சுகமாக்க முடியல்ல. மூன்றாம் பிரிவில ஒரு நல்லவர் வளவில ஒரு குடில் வைச்சு தந்து வளவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறார். அங்கதான் இருக்கம். எனக்கு இரண்டு பிள்ளைகள்" என்றாள் பாக்கியம். "எந்த நேரமும் இந்தப் பொடியனோடதானே திரிமிறாய் அப்படியென்றா மற்றப் பிள்ளை எங்க?" வினக்கம் கேட்டாள் அமிர்தம்.

"மூத்தது பொம்புளப்புள்ள அக்கா அனாதை இல்லத்தில விட்டிருக்கன். இவனையும் ஆண்கள் அனாதை விடுதியில் விட்டனான். ஆனா இவன் ஒண்ணா என்ற ஓடி வந்திட்டான். படிப்பும் ஏறல்ல. இங்க எனக்கு சொந்தக்காரங்க யாருமில்ல. ஊருக்குப் போகலாமென்றா அங்கையும் சொந்தக்காரங்க வசதிபடைத்தவர்கள் இல்ல. அவர்களையும் ஏன் கஷ்டப்படுத்துவான். அதனாலதான்......". பாக்கியம் முடிக்க முன்னே "அதுதான் காரைதீவிலே இருந்திட்டாய் போல". "ஆமாக்கா பக்கத்தில இருக்கிறவங்க எனக்கு நல்ல உதவி. அதால இங்கேயே இருந்திட்டன்". பேசும் போது ஏதோ நினைத்தவள் போல எழுந்து "கதையில நேரம் போனதே தெரியல்லக்கா. கந்தையா போடியார் வீட்டில நெல்லுக் காயப்போட வேணும். வாறனக்கா. டேய் வேலு வாடா வெயில்மங்க முதல் நெல் காயப் போடவேணும்" அரிசிப்பையை எடுத்து, பொடியனையும் கையில் பிடித்தவாறு ஓட்டமும் நடையுமாகப் போகிறாள். கையை இழுத்தவனாக "கையை உடம்மா, கை வலிக்குது" சிணுங்கினான் வேலு.

"டேய்! உனக்கு கை மட்டும்தாண்டா வலிக்குது. ஆனா எனக்கு மனமும் வலிக்குதுடா" என்று மனம் வெதும்பியவள் மகனுக்கு சொல்லமுடியாத இல்ல.... சொல்லியும் விளங்காத தன் வாழ்க்கையின் சோதனைகளை, கஷ்டங்களை எண்ணிப் பார்க்கிறாள். நெஞ்சு கனக்கிறது. கணபதி வருத்தமாக உயிரோடு இருக்கும்போதே வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த கணபதியின் கூட்டாளி வைத்தி அடிக்கடி வருவான். கணபதி வருத்தமாக விழுந்ததும் அவன் வருகை கூடியது. வருவது மட்டுமில்லாது பாக்கியத்திடம் மெல்ல மெல்ல சேட்டை விடத் தொடங்கினான். நடக்கும் போது தவறுதலாகப் படுவதுபோல உரசுவது, முழங்கையால் இடிக்கிறது, பிள்ளைகளுக்கு தின்பண்டம் கொடுப்பது போல அவள் கையைப் பிடிப்பது. பாக்கியமும் புருஷனிடம் ஏதும் சொல்லி பிரச்சினையாக்காமல் விலகி அவதானமாக நடந்து வந்தாள்.

ஒரு நாள் மாலைபட்டு விட்டது. குப்பி இலாம்புகளில் ஒன்றை குடிலுக்குள் வைத்து விட்டு மற்றதை வெளியில் வைத்தாள். காற்று கொஞ்சம் வேகமாக வீசிக்கொண்டிருந்தது. கணபதி தூக்கக் குளிசை போட்டுட்டு தூங்கிப்போனான். பிள்ளைகள் குடிலுக்குள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வெளி விளக்கு அடித்த காற்றால் அணைந்து போனதால் அதை எடுக்க பாக்கியம் வெளியே வந்த போது யாரோ எதிர்பாராதவிதமாக கட்டிப்பிடிக்க பயந்து போய் கத்துகிறாள். கட்டிப்பிடித்தவன் அவள் வாயைப் பொத்தி "நான்

தான் பாக்கியம் வைத்தி, கத்தாத''. வைத்தியின் குரல் அவள் காதினுள் குசுகுசுக்கிறது. சிலிர்த்த பாக்கியம் எங்கிருந்துதான் அவளுக்கு அத்தனை பலம் வந்ததோ தெரியாது, திமிறி அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு குடிலுக்குள் ஓடினாள். உடல் படபடவென நடுங்கியது. பாக்கியம் போட்ட சத்தத்தாலும், அவள் உள்ளே ஓடிப் போன வேகத்தாலும் பிள்ளைகள் வெளியேறி பேந்தப் பேந்த விழித்தனர்.

''மாடு ஒன்று.... ஓடிப்போகப்.. பயந்து.. போனன்.... மக்காள் அது...... தான் கத்...தினநான்'' நாத்தடுமாற ஒருவாறு ஒரு பொய்யை பிள்ளைகளுக்குச் சொல்லி வைத்தாள் பாக்கியம். எதுவுமே தெரியாது கணபதி நித்திரையில் இருந்தான். படபடப்பு பாக்கியத்தை விட்டு இன்னும் போகவில்லை. மூலையில் பானையில் இருந்த தண்ணீரைக் குவளையில் கொஞ்சம் மொண்டு குடித்தாள். நடுக்கமும் பயமும் மெல்லத் தணிந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மற்ற விளக்கை எடுத்திற்று வெளியே வந்து பார்த்தாள். யாரையும் காணவில்லை.

இந்தச் சம்பவத்துக்குப்பிறகு பாக்கியம் இல்லாத நேரத்தில் கணபதியிடம் வந்த வைத்தி இவளைப்பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி அவனை உசுப்பேத்தி விட்டான். அதன் பிற்பாடு அவனுக்கிருந்த கொஞ்ச நஞ்ச நிம்மதியும் போய்விட்டது. எடுத்ததற்கெல்லாம் கணபதி சந்தேகப்பட்டான். அவன் இறக்கும் வரை அந்த எண்ணத்தை அவனிடமிருந்து மாற்ற முடியாது தோல்வியுற்றாள்.

கணபதி இறந்த பின் தனிய இருப்பதற்கே பயப்பட்டாள். அவளைப் பார்த்து அவளுக்கே வெறுப்பு ஏற்பட்டது. பாக்கியம் அவ்வளவு அழகான வளுமல்ல. நிறமும் கறுப்பு. இரு பிள்ளைகளின் தாய் வேறு. இருந்தாலும் நக்கலடிக்கிற காவாலிகளால் சும்மா இருக்க முடியவில்லை. அதன் பிறகு தான் இந்தக் கோலம். புனிதவதி யாரைப் போல பேயுருப் பெற்று காரைக்காலம்மையாராக இவளால் முடியுமா? இல்லை. ஔவையாரைப் போல கிழவியுருவைப் பெறத்தான் முடியுமா? இந்த அழுக்கு உருவைத்தான் அவளின் கற்புக்கு பாதுகாப்பாகத் தேட முடிந்தது.

''அம்மா! அம்மா!'' பாக்கியத்தின் கையைப்பிடித்து இழுத்து அவளைச் சுயநினைவிற்குக் கொண்டு வந்தான் வேலு. ''ஆ....அ என்ன வேலு'' தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள் பாக்கியம். ''அம்மா'' மீண்டும் சிணுங்கினான். ''ஏன்டா, என்னோடு கிடந்து நீயும் இப்படிக் கஷ்டப்படுகிறாய். இதற்குத்தான் படியடா படியடா என்று தலையில் அடித்துக்கிட்டன். கேட்டயா? படிக்காவிட்டாலும் பரவாயில்ல. ஒழுங்காக இல்லத்தில் இருடா என்றும் சொன்னன். கேட்கமாட்டேனென்று ஓடிவந்து இப்ப கஷ்டப்படுறாய்'' அலுத்துக் கொள்கிறாள் பாக்கியம்.



''எனக்குத்தான் படிப்பு ஏறல்லயேயம்மா அதனாலதான்.........'' இழுத்து நிறுத்தினான். ''அதனால இப்ப எனக்கு ஒரு கால்கட்டாகக் கஷ்டப்படுகிறாய்'' வேதனையில் பாக்கியம். ''இல்...லம்மா, உனக்கு பாதுகாப்பாக நான் இருக்கனம்மா'' இது வேலுவின் பெரிய வார்த்தை. ''ஓகோ! நீ அவ்வளவு பெரிய மனுசனாகிட்டயா? உன்னைப் பாதுகாக்கவே நான் தேவைப்படுகிறது. அதுக்குள்ள நீ எங்க என்னைப் பாதுகாக்கிறது?'' விரக்தியால் சிரிக்கிறாள்.

''அம்மா, உனக்கு உதவியாக உன் கூடவே திரியிறேனேயம்மா'' வேலு அழமாட்டாக் குறையாகக் கூறியதும் பாக்கியம் நெகிழ்ந்து போனாள். ''ஆமாண்டா, உண்மையில் ஒரு வகையாக நீயும் எனக்குப் பாதுகாப்புத்தாண்டா மகனே'' குந்தி அவன் நெற்றியில் முத்தமிடுகிறாள். கண்கள் பனிக்கின்றன.

''என் தாயின் தலையெழுத்தும் நல்லா இல்ல, என் தலையெழுத்தும் நல்லா இல்ல. உம்..... உன் தலையெழுத்து எப்படியாகுமோ......அதாண்டா.....என் கவல.'' நெடுமூச்சோடு கண்ணீர் விடுகிறாள். ''அம்மா.....அம்மா, குழறாத அம்மா. நான் உன்னைப் பார்த்துக்குவனம்மா, கஷ்டப் படுத்தமாட்டனம்மா குழறாத'' அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிய தாயின் கண்களைத் துடைத்து விடுகிறான். பாக்கியம் மகனைக் கட்டி அணைக்கிறாள். தற்காலிகமாக ஒரு ஆறுதல் அவளை ஆட்கொள்கிறது.

## தியாகம்

வாழ்வு

வெளிச்சம்

மரணம்

மெழுகுவர்த்தி

சீரோஜா மௌனேந்திரன்



# தேடினேன்

நெற்றிக்கண் திறந்த
சிவபெருமான் பெரிதென்றான்
ஒருவன்.
இல்லையில்லை!
சிலுவை சுமந்த
இயேசுவே பெரிதென்றான்
இன்னொருவன்.
மனிதனாக வாழ்ந்து
துறவியான புத்தன் தான்
பெரிதென்றான் மற்றொருவன்.
கோட்பாட்டைக் கூறி
வாழ்க்கையை நெறிப்படுத்தும்
உருவமில்லா கடவுள்
அல்லா தான் பெரிதென்றான்
அடுத்த ஒருவன்.
தெருவின் ஓரத்தில்
திருக்குர்ஆனும் பைபிளும்
கீதையும் மகாவம்சமும்
ஆக்ரோச சண்டையில்
உலகமே இருண்டு விட
செய்வதறியாது
திராணியற்ற ஒருவனாய்
மதம் பிடித்த மனிதர்களுக்குப்
பயந்து
நானும் மதம் பிடித்து
ஓடினேன்....
ஒவ்வொரு மதத்திற்கும்.
கோயிலுக்கு ஓடினேன்!
சிவன் அங்கே இல்லை!!
தேவாலயம் தேடினேன்!
இயேசுவைக் காணவில்லை!!
பள்ளிவாசல் பார்த்தேன்!
அல்லாவும் அங்கில்லை!!
அல்லாவிற்கு உருவமே
இல்லையே!
எப்படி நான் இவர்களைக் காண்பேன்?
தலையைப் பிய்த்துக் கொண்டு
தறிகெட்டுத் தவித்தேன்.
வானத்தில் அசரீரி
"நால்வரும் ஒன்றுதான்
கட்டிடங்களில்
எங்களைத் தேடாதே"



ந.காயத்ரி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி



கொழும்பு தமிழ்ச் சங்கம

## மகளிர் பக்கம்



# பூங்கதிர்

தயாரிப்பு : சுமதி

இப்பகுதி மகளிருக்கானது. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
இளங்கதிர், மே/பா 'செங்கதிர்' ஆசிரியர், இல.19, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு.



## உடைகளைத் தெரிவு செய்யும் போது......

இவ்விதழில் குள்ளமாகவும், குண்டாகவும் இருக்கும் பெண்கள் எந்த வகையான ஆடை அணியலாம் என்று பார்ப்போம். நீங்கள் நேரான கோடுகளுடைய கூடிய அடுக்குகளற்ற நீளமான பாவடையையும் இடையிலிருந்து கொஞ்சம் நீளமானதும், நீளமான கைகளையுடையதுமான 'பிளவுஸ்' செயும் தெரிவு செய்யுங்கள். அல்லது,

முக்கால்வாசிப் பாவடையையும் நீளமான சிறிய கைகளுடைய வட்டக் கழுத்துடையதுமான 'பிளவுஸ்' செயும் தெரிவு செய்யுங்கள். நீளக் கோடுகளுடைய துணியாகவிருப்பின் சாலச் சிறந்தது. ஏனெனில் அது உங்களை உயரமாகக் காட்டும்.

பின் காதணிகளைச் சற்று அகலமானதாகவும் நீளமானதாகவும் கழுத்திற்கு அணியும் அணிகலனும் அதேபோன்று ஆடைக்கு ஏற்றாற்போல் சற்றுப் பெரிதானதாகவே அமையட்டும். "கைச்செயின்" ஒரு கைக்கும் அகலமான ஒரு வளையல் மாத்திரம் மற்றதிற்கும் அணியுங்கள். பாதணி தற்பொழுது கடைகளில் ரகம் ரகமாக உள்ளது. அவற்றுள் மெல்லிய உயர்ந்த பாதணிகளைத் தெரிவு செய்யுங்கள்.

இனியென்ன..... நீங்களும் காண்போரை ஈர்க்கும் கன்னியர்தான்.

# ஆரோக்கியமே அழகு



- அதிகமான நீர் அருந்துதல் வேண்டும்.
- தொடர்ச்சியாக கடும் வெயிலில் செல்லக் கூடாது.
- தினமும் குளித்தல் வேண்டும்.
- உணவில் பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- அதிகமாகக் கோபப்படக் கூடாது.
- இனிமையாக, என்றும் இன் முகத்துடன் இனிய வார்த்தைகளைப் பேசுங்கள். பிறகென்ன, ஆரோக்கியம் + அழகு உங்களிடம் தான்.



# முகம் பொலிவு பெற.....

- மெதுவாக நடவுங்கள்.
- மகிழ்ச்சியான சம்பவங்களை மீட்டுப் பாருங்கள்.
- இனிமையாகப் பேசுங்கள்.
- உணவு உண்டபின் ஓய்வெடுங்கள்.
- அன்பை வார்த்தைகளால் வெளிப்படுத்துங்கள்.



# அழகு குறைகின்றது எனக் கவலையா? காரணம் தெரிய வேண்டுமா??

**இதோ அறிந்து கொள்ளுங்கள்....**

- வேலைப் பழு.
- திட்டமிட்ட வேலையின்மை.
- கண்ட, கண்ட நேரங்களில் உறங்குதல்.
- கவலை
- எதிர்காலம் பற்றிய அச்சம்.



# உங்கள் தேகம் தகதகவென மின்ன வேண்டுமா?

நீங்கள் குளியலுக்குப் பயன்படுத்தும் வெந்நீரில் கால் குவளை தேன் இட்டுக் குளிக்கவும். பிறகென்ன அழகிதான்.

## தொண்டை கரகரப்பாக இருக்கின்றதா?

இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் மிளகுத்தூள், மஞ்சள் இட்டு காய்ச்சிய பால் ஒரு 'கப்' அருந்துங்கள். இவ்வாறு செய்துவர உங்கள் குரல் கணீர் என ஒலிக்கும்.



# நினைவிடைதோய்தல்



எழுத்தாளரும் இலக்கியச் செயற்பாட்டாளரும் திருமண ஆற்றுப்படுத்துநருமான வேல் அமுதன் (குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதன்) அவர்கள் 'மகவம்' (மதிகலைஞர் வட்டம்) பற்றிய தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்.

# மகவம்

**வேல் அமுதன்**

வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

பாரதியார்.

1948 ஆம் ஆண்டு. அப்போது எனக்கு வயது பத்து. தனிப் பிள்ளையான என்னை எனது தாயார் கட்டுப்பாடோடும், அதேவேளை கவனமாகவும் வளர்த்து வந்தார்.

ஒருநாள் காலை. அன்று செல்வச் சந்நிதி தேர்த்திருவிழா மஹோற்சவம். ஆச்சியின் (அம்மாவை அந்நாளில் நாம் ஆச்சி என அழைப்பதுதான் வழக்கம்) அனுமதியோடு பாத யாத்திரையாகச் செல்வச் சந்நிதி ஆலயத்திற்குப் பயணித்துக் கொண்டிருந்தேன். வழியில் ஒரு தண்ணீர் பந்தல். தாக சாந்திக்கு நான் போனதும், ஒரு கொடுமை அரங்கேறுவதைக் கண்டு திகைத்துப் போனேன்! தாகசாந்திக்கு வருவோரிடம் "வெளியோ" எனக் கேட்கப்பட்டது. "உள்ளே" என் போருக்கு ஒருவகை வரவேற்பு; உள்ளே என்போருக்கு மூக்குப் பேணியிலும், வெளியே என்போருக்கு சோடாப் போத்தலிலும் சர்க்கரைத் தண்ணீர் வழங்கப்பட்டது.

இந்தச் சமூகக் கொடுமை மாத்திரமல்ல; இன்னும் இதுபோன்ற சில கொடுமைகளையும் கண்ணுற்றபோது, சமூகத்தை நல்வழிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் என் மனதில் முளைவிட்டது.

நான் செய்த சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஒன்று கலை, இலக்கிய, சமூக அமைப்புக்களைத் தோற்றுவித்து முடிந்தளவு சேவை செய்தமை. பின்வரும் அமைப்புக்கள் என்னால் தோற்றுவிக்கப்பட்டவை.

| | அமைப்பு | தோற்றுவித்த ஆண்டு |
|---|---|---|
| 1) | சங்கப் பலகை (நூலகம்) | 1948 |
| 2) | குரும்பசிட்டி நலன்புரிச் சபை | 1965 |
| 3) | இலங்கை அறிவு இயக்கம் (அறிவகம்) | 1970 |
| 4) | தமிழ் கதைஞர் வட்டம் (தகவம்) | 1974 |
| 5) | வள்ளுவர் மாமன்றம் | 1974 |
| 6) | வேல் வெளியீட்டகம் (வேகம்) | 1983 |
| 7) | மதி கலைஞர் வட்டம் (மகவம்) | 1983 |

இவை அனைத்தைப் பற்றியும் எழுதும் நோக்கம் இன்று எனக்கில்லை.

மதி கல்வி நிறுவனம், மதி கலைஞர் வட்டம் (மகவம்), சங்கப்பலகை (நூலகம்), மதி அங்காடி ஆகிய நான்கு நிறுவனங்களின் ஒன்றிணைப்பே மதி அக்கடமி.

இதன் நிர்வாக இயக்குநனர் மதி அக்கடமி அதிபர். அவருக்குப் பக்கபலமாக ஒரு ஆலோசனைக்குழு செயற்பட்டது. இது 10.10.1983இல் யாழ்ப்பாணம் குரும்பசிட்டி இராசரத்தினம் கட்டடத்தில் சம்பிரதாய ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பண வைபவத்தில் பண்டிதர் தங்கம்மா அம்மாக்குட்டி, புலவர் ம.பார்வதிநாதசிவம், கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, சன்மார்க்க சபை பொதுச் செயலாளர் திரு.த.இராசரத்தினம், எழுத்தாளர் அநு.வை. நாகராஜன், எழுத்தாளர் மு.திருநாவுக்கரசு, சட்டத்தரணி K.V.மகாதேவன், சட்டத்தரணி (இன்று ஓய்வுபெற்ற நீதிபதி) மனோ சிறிதரன், மில்க் வைற் நிறுவன அதிபர் க.கனகராசா, அண்ணா நிறுவன அதிபர் S.P.நடராசா முதலியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

ஒரு துரதிஷ்டம்! தொடங்கி ஐந்தாண்டுகளுக்கு மேல் தொடர்ந்து தொடங்கிய விடத்திலிருந்து செயற்பட முடியவில்லை. கொடூர இராணுவ நடவடிக்கைகளால் 26.03.87 ஊரெழுவிற்கு இடம்பெயர நேரிட்டது. துரதிஷ்டத்துள் ஒரு அதிஷ்டம்! ஊரெழுவில் செயற்பட்ட காலமே மகவத்தின் பொற்காலமாக அமைந்தது!

போர்ச் சூழலாக இருந்தபோதும் மிகப் பிரபல்யமாகப் பேசப்பட்ட 'சந்திப்பு' எனப் பொதுவாகப் பேசப்பட்ட மகவம் கலை, இலக்கியச் சந்திப்புக்கள் நாற்பத்தியொன்று ஊரெழுவிற்தான் அரங்கேறின.



மகவம் சந்திப்புக்கள் பற்றியும், மற்றையபொதுப் பணிகள் பற்றியும் சில விபரங்களைத் தர விரும்புகிறேன்.

**மாணவர்களுக்காக :**

தமிழ்ப் பண்டிகைகளான தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, நவராத்திரி முதலியவை பண்பாட்டு ரீதியாக மகவத்தின் மதி அக்கடமி மண்டபத்தில் கொண்டாடப்பட்டன.

இப் பண்டிகைக்கான மண்டபத்தை அலங்கரித்தல், மேடையைத் தயார் செய்தல், சபையை நிர்வகித்தல் மாணவரின் கடமையாக இருந்தன.

மாணவரிடை எழுத்துப் போட்டிகள், நாவன்மைப் போட்டிகள், நடன நிகழ்வுகள், தனி நடிப்பு முதலியன நிகழ்த்தப்பட்டன.

இந்த வகையில் மாணவரிடை கற்பனை வளம், கலைத்திறன், ஆற்றல், ஆளுமை, தன்னம்பிக்கை, கூட்டு முயற்சி ஆகிய பண்புகள் வளர்த்தெடுக்கப்பட்டன.

**பொது மக்களுக்காக :**

கலை, இலக்கிய அறிவை, ஆற்றலை மக்கள் மத்தியில் மலரச் செய்ய 'சந்திப்பு' என்ற மகுடத்தில் மாதாந்த தொடர் நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது. இது முறிவின்றித் தொடர்ந்து நாப்பத்தொரு மாதங்கள் நடைபெற்றன. அன்று யாழ்.மண்ணில் வாழ்ந்த இலக்கிய அறிஞர்கள் கலந்து சிறப்பித்த நிகழ்விது.

இச்சந்திப்பில் "இலக்கியச் செய்திச் சரம்" என்றொரு அழகிய அரும் நிகழ்வு இடம்பெற்றது. மகவம் செயற்பட்ட 1987 இல் கடந்த காலம் உள்நூர் யுத்தம் உக்கிரமாக நடைபெற்றமையால், மக்களுக்கு இலக்கியத் தகவல்களை அறிய - பரிமாற சிரமமாக இருந்தமையால், பல்வேறு வழிகளில் தகவல்கள் திரட்டப்பட்டு, அழகாக வரிசைப்படுத்தி, ஒருவர் சுவையாக வாசிக்க, இன்னொருவர் கலைத்துவமாக விமர்சித்தார். அன்று இலக்கிய ஆர்வலர் மத்தியில் இந்நிகழ்வுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

இந்த நிகழ்ச்சிகளை இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்ப அன்று 'கலைக்கோலம்' நிகழ்வுக்குப் பொறுப்பாக இருந்த பிரபல இலக்கியத் திறனாய்வாளர் திரு.கே.எஸ்.சிவகுமாரன் உதவி புரிந்தார்.

அந்த நாள்களில் கிராம மட்டத்தில் வேறெங்கேனும் இவ்வாறு ஒழுங்கு தவறாது சிரமமாய் இலக்கியச் சந்திப்புக்கள் நடந்ததற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

**அரும் கலைஞர் தெரிவு :**

அர்ப்பணத்தோடு அரும் கலைத் தொண்டு நீண்ட காலத்திற்கு (பொதுவாக 25 வருடங்களுக்கு மேல்) செய்தவர்களும், அதுவரை இனம் காணப்பட்டும் கௌரவிக்கப்படாதவர்களுமான அரும் கலைஞர் முழு இலங்கை ரீதியாகத் தேடப்பட்டு - ஆதாரங்கள் திரட்டப்பட்டு - நுணுக்கமாக ஆராயப்பட்டு - தெரிவுக்கென நியமிக்கப்பட்ட 'தெரிவு குழு' சிபார்சு அடிப்படையில் ஈராண்டுக்கு ஒருவர் மாத்திரம் என்ற ஒழுங்கு முறையில் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் மன்றில் கௌரவிக்கப்பட்டு - விருதுகள் வழங்கப்பட்டன.

**நூற் கட்டமைப்புக் கலை :**

Library Binding செய்யப்பட்ட நூல்கள் காலத்தை வென்று கற்போருக்கு உறுதுணையாக இருப்பவை. நூற் கட்டமைப்புக் கலைஞர் பொதுவாக அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆனால், மகவம் புதிய நடைமுறையைத் தோற்றுவித்தது. யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்மாரின் Thesis (பட்டப்படிப்புக்கான ஆய்வுக் கட்டுரை) உட்பட வட இலங்கை தமிழ் நூற் பதிப்பகத்தாரின் வெளியீடுகளையும் உயர் தரத்தில் கட்டமைப்புச் செய்த குரும்பசிட்டியூர் உயர்திரு ஆறுமுகம் முத்தையாவை ஈழத்தின் தலைசிறந்த நூற் கட்டமைப்புக் கலைஞனாகக் கண்டு, பெருவிழா எடுத்து, விருது வழங்கி, கௌரவித்து மகிழ்ந்தது மகவம்.

**வாழ்க்கைக் கலை :**

இப்படித்தான் வாழ்வதெனத் திட்டம் தீட்டி சீராக வாழும் வாழ்வே கலை. காதலன் முற்றுமுழுதாகக் கண் பார்வையைப் பறிகொடுத்தும் - பெற்றோர், உற்றார், உறவினர் எதிர்த்து நின்றும் - காலமும் நேரமும் சாதகமாக இல்லாதுவிருந்தபோதும் - காதல் அன்றேல் வேறேதுவும் இல்லை எனும் மன வைராக்கியத்தோடு தன் காதலனையே மணந்து - நாலு நல்ல மைந்தரை ஈன்று, வாழ்க்கைச் சவாலை வெற்றி கொண்டு வாழும் கலைஞர் திருமதி. பவானி மகாதேவன். இவ்வரும் கலைஞரை இனங்கண்டு - பெருவிழா எடுத்து - "வாழ்க்கை கலை மாமணி" என்ற கௌரவப் பட்டத்தை வழங்கி, மகிழ்ந்தது மகவம். இவர் அண்மையில் அகவை அறுபதைப் பூர்த்தி செய்தபோது மணி விழாவும் எடுத்தது. இவருக்குஜெர்மனி "வெற்றிமணி" பத்திரிகை "இல்லற ஜோதி" என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

**நாடக ஒப்பனைக் கலை :**

திரைக்கு முன் நிற்பவனே கலைஞன் எனத் தப்புக்கணக்குப் போடும் அந்நாளில், திரை மறைவில் (In Green Room) நின்று ஒப்பனை செய்து வந்த ஒப்பற்ற கலைஞனை இனங்கண்டது மகவம். அவர்தான் ஒப்பனைக்



கலைஞன் சாமுவேல் பெஞ்சமின். இவர் நாட்டுக்கூத்துக் காலம் முதல் நவீன மேடை நாடக காலம்வரை ஆயிரக்கணக்கான நாடகங்களுக்கு ஒப்பனை செய்தவர். கலைஞன் பெஞ்சமின் அவர்களுக்குப் பெருவிழா எடுத்து, கௌரவித்து, "ஒப்பனைக் கலை வேந்தன்" எனப் பட்டமளித்து மகிழ்ந்தது மகவம். அன்றைக்கு நிகழ்வுக்குச் சிறப்புச் சேர்க்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் இ. பாலசுந்தரம் "ஈழத்தில் ஒப்பனைக் கலை" என்ற மகுடத்தில் எழுதிய நூலை, மகவம் வெளியிட்டது. இந்நூலே ஒப்பனைக் கலை சம்பந்தமாக எழுதப்பட்ட முதல் நூல்.

**அரை தசாப்த விழா :**

"இலக்கிய அமைப்புக்கள் ஐந்தாண்டுகள் நின்று நிலைப்பதே பெரிய காரியம்" என இரசகமணி கனகசெந்தில்நாதன் சொல்லியதுண்டு. மதி அக்கடமி அரை தசாப்தத்தைத் தாண்டி வீறுநடை போட்ட நிலையில், விழாவெடுத்து மகிழ்ந்தது மகவம். இவ்விழாவின் சிறப்பம்சமாக அன்று யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட சமூகவியல் விரிவுரையாளராக இருந்த இன்றைய துணைவேந்தர் நாகலிங்கம் சண்முகலிங்கன் விழாவில் "தனி மனித நிறுவனம்" என்ற பொருளில் பேருரை வழங்கினார். அப்பேருரையை நூலாக வெளியிட்டு மகிழ்ந்தது மகவம்.

**ட்டறை :**

வில்லிசை விற்பன்னர் 'அன்னைதாசன்' க. ஆனந்தராசா அவர்களைக் கொண்டு மகவம் 06.04.94 முதல் 25.05.94 வரை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுக்கு வில்லிசைப் பட்டறை நடத்தியது. இதுவே இலங்கையில் வில்லிசைக்கு நடந்த முதல் பட்டறை.

1992 ஆம் ஆண்டு சிவராத்திரிக் கொண்டாட்டத்தில் மகவம் ஏற்பாட்டில் கவிஞர் க. ஆனந்தராசா அவர்கள் ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளிகோவில் மதி கல்வி நிலைய ஆசிரியரைக் கொண்டு எழுத்தாளர் வேல் அமுதனின் "வைகறை" சிறுகதையை வில்லிசையில் இசைப்பித்தார். இதுவே இலங்கைப் படைப்பாளி ஒருவரின் ஆக்கம் வில்லிசையில் ஒலித்த முதல் முயற்சி.

நாடக இயக்குநர் க. ஸ்ரீ. கந்தவேள் மகவம் ஏற்பாட்டில் 05.04.94 முதல் - 02.05.94 வரை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நாடகப் பட்டறை நடத்தினார். பட்டறை வழியாக அவர் வேல் அமுதனின் "கறை படிந்த நாள்கள்" நாடகத்தை அரங்கேற்றினார். இந்நாடகம் அந்நாள்களில் நாலு இடங்களில் மேடையேறியது.

**பவள விழாக் கொண்டாட்டம் :**

யாழ்ப்பாணத்தில் உயர்தரக் கல்லூரிகளில் ஒன்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி. மகாஜனா வெறுமனே பட்டதாரிகளை உற்பத்தி செய்த கல்லூரி அல்ல. ஈழத்தில் தலைசிறந்த எழுத்தாளரை உருவாக்கிய கலை இலக்கிய உலைக்களமாகச் செயற்பட்ட முன்மாதிரியான கல்லூரி. இக்கல்லூரியின் சமூகப் பணிகளைப் பறைசாற்ற மகவம் அதன் பவள விழாவை பெரும் திருவிழாவாக எடுத்து மகிழ்ந்தது.

**நூல் அறிமுகம் :**

நூல்களை எழுதுவது எழுத்தாளன் கடமை. அவற்றை அறிமுகம் செய்யும் பொறுப்பு இலக்கிய அமைப்புக்களுக்கும் உண்டு. இப்பொறுப்பை மகவம் இயன்றவரை ஆற்றியது. 14.04.1987 பார்த்திபன் எழுதிய "நிஜங்கள்" நூலையும், 11.12.1999 அ.முருகேசம்பிள்ளை எழுதிய "சிறுவர் பிரயாணம்" நூலையும், 28.05.1987 ஊரெழு ச.வடிவேலு எழுதிய "மணிமொழிக் கதைகள்" நூலையும், 30.10.1988 நாகலிங்கம் சண்முகலிங்கனின் ஒரு தனிமனித நிறுவனம்" நூலையும், 24.06.1990 பாலசுந்தரம் எழுதிய "ஈழத்தில் ஒப்பனைக் கலை" நூலையும் மகவம் அறிமுகம் செய்து மகிழ்ந்தது.

இலங்கையில் வெளிவரும் நூல்களையும், மாசிகைகளையும், நாளேடுகளையும் மக்கள் இலேசாக மதி அங்காடியில் பெற்றுக்கொள்ள வசதியையும் மகவம் ஒழுங்குசெய்திருந்தது.

**நிறைவுரை :**

மகவம் என்ற அலங்காரத் தேர் அசைந்துவரச் செயற்பட்டவர் ஒருவரன்று. திருமதி. அ.இராஜேஸ்வரி, பொறியியலாளர் அ.மதிமகன், நடனாசிரியர் உ.மதினி, கவிஞர் மாவை வரோதயன், கலைஞர் ச.சக்திதரன், கலைஞர் அன்னைதாசன், கலைஞர் சோ.தர்ஷினி, சட்டத்தரணி K.V.மகாதேவன், பேராசிரியர் இ.பாலசுந்தரம், துணைவேந்தர் நாகலிங்கம் சண்முகலிங்கன், தமிழ் விரிவுரையாளர் க.இரகுபரன், பொறியியல் ஆசிரியர் து.ஜெயதேவன் முதலிய இன்னும் பலர் பக்திச் சிரத்தையோடு வடம் பிடித்து இழுத்தமையின் பலாபலனே.

மகவம் இன்று முடங்கிவிட்டது என்பது உண்மை. ஆனால், காலச் சூழல் கனியும் போது மீளச் சிலிர்த்தெழும் என்பதும் மறுக்க முடியாத ஒன்றே. ■



என்ன வினாசித்தம்பி, பொஞ்சாதி புள்ளையளோட தீத்தக் கரைக்குப் போய் வாற மாதிரிக் கிடக்கு. உங்களுக்கென்ன, எட்டிக் காலடி வெச்சாக் கோவிலடிதானே!

# விளாசல் வீரக்குட்டி



நானும் போகணும், தீத்தமாட வேணுமெண்டு ஒவ்வொரு வருசமும் நினைக்கிறதான். போகத்தான் வசதி வரல்ல. தீத்த நாளண்டு முத்தத்தில் இருக்கிற கிணத்தில அஞ்சாறு வாழியள்ளி தலையில ஊத்தினா நம்மட தீத்தம் முடிஞ்ச மாதிரித்தான்.

இந்த மாமாங்கத் தீத்தக்கர வால வயதான பொட்டைகளுக்கும் பொடியளுக்கும் தான் சரி. சன நெரிசலுக்குள்ள இடிக்கிறதும், உரசிறதும், முட்டுறதும் மோதுறதும் இடுப்பு வழிய நோண்டுறதும் என்ன பாடத்தான் படுதுகள்! ஒருதரம் நானும் என்ர பொஞ்சாதியக் கூட்டித்துப் போனன். எவனோ ஒரு வழிசல் மடக்கெண் டிருக்கும் பொஞ்சாதிர இடுப்பில கிள்ளிப் போட்டான். அவள் பட்டபாட்டக் கண்கொண்டு பாக்கேலா. அவன இழுத்துப்புடிச்சி மொங் கோணுமெண்டு ஆத்திரம் வந்தாலும், கையும் எடுக்கேலா என்னால காலும் எடுக்கேலா. அவ்வளவு சனநெரிச்சல்.

இரவிரவாக வெருக்கடி நாய்போல சுத்தித் திரிவானுகள். கோவில் எங்க இருக்கெண்டு கேட்டாத் தெரியா. இவனுகளெல்லாம் ஏன் பொட்டைகளும்தான் சாமி கும்பிடவா வருகுதுகள்? உனக்கும் தெரியும் தானே! அந்த நாளையில கலியாணம் முடிக்க முதல் நீயும்.... பொஞ்சாதி புள்ளயளோட வரக்க

சொல்ற சரியில்ல. தகப்பன இழந்தாக்கள்தான் ஆடி அமாவாசையண்டு பிதிரகடனத் தீக்கிறதுக்கு தீத்தம் ஆடுறெண்டு சொல்லுவாங்க. இப்ப ஆராரு ஆடுறாங்களோ அந்த மாமாங்க அப்பனுக்குத்தான் வெளிச்சம்.

நாகரிகம் முத்துனபுறகு இப்பெல்லாம் இந்தத் தீத்தம் திருவிழா வெளவால் தொங்குறமாதிரிப் பொயித்து.

நம்மட பொண்புரசுகளும் சுத்த மோசம்டா வினாசித்தம்பி. கோவிலுக்கு உடுத்திட்டுப் போற மாதிரியா போறாளுகள்? அதுகளக் கண்டா நமக்கும் கிள்ளத் தான் ஆசவரும். அதனாடித்தான் நான் இப்பெல்லாம் அந்தப் பக்கமும் போறல்ல.

கண்ணாடி, பீப்புச் சாமான் கடையள்தான் அந்தக் காலத்தில இருந்தாம். இப்ப கொழும்பும் தோத்துப் போகும். தீத்தக்கரைக்குப் போறெண்டா குட்டிச் சாக்கில தான் காசக் கட்டித்துப் போகவேணும்.


அந்நா... பொடியண்ட கையில இருந்த பலூனும் வெடித்துப் பொயித்து.... சரி வினாசித்தம்பி என்ர பள்ளத்து வளவுக்க நாட்டுறதுக்கு அஞ்சாறு அன்னாசிக்குட்டி புறக்கியெடுக்கப் போக வேணும். எதுக்கும் சனம் கலையட்டும். நீங்க பொயித்து வாங்க. ■

'பாமசி' கடை முதலாளி (வாடிக்கையாளர் ஒருவரிடம்) : முன்பு சாப்பாட்டுக் கடையில் வேலை செய்த பையன் ஒருவனை எனது 'பாமசி' யில் வேலைக்குச் சேர்த்தது தப்பாகப் போயிற்று.

வாடிக்கையாளர் : ஏன் முதலாளி? என்ன பிரச்சினை?

'பாமசி' கடை முதலாளி : முட்டைப்பூச்சி மருந்து வாங்க வந்தவரிடம் "கொண்டு போகவா? இங்கேயே சாப்பிடவா?" என்று கேட்கிறான்.






## நீடித்துப் பணியாற்ற வாழ்த்துகிறேன்.

தங்கள் 'செங்கதிர்' இதழ்கள் படித்தேன். மிகக் காத்திரமான உள்ளடக்கத்தோடு வெளிவருவது பாராட்டத்தக்கது. தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளுக்கு எதுவிதத்திலும் தரக் குறைவில்லாது கலைமகள், தீபம், தாமரை போன்றவற்றை நினைவு கூரத்தக்கவாறு அமைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

எமது மண்ணில் மலர்ந்து பின் மறைந்துவிட்ட மலர், அஞ்சலி போன்றவற்றைப் போன்று மறைந்துவிடாமல், நிலைத்து நின்றால் இலக்கிய உலகு பெரும் பாக்கியமாகக் கருதும்.

சர்வதேச மகளிர் தினத்துக் குறிப்புக்களை எனது நூலிலிருந்து பெற்று பிரசுரம் செய்தமை நன்றிக்குரியது.

'செங்கதிர்' நடுநிலை நின்று மண்வாசனை வீசி நீடித்து மணம் பரப்ப வேண்டும் என்று இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

- யூ.எல்.அலியார் M.A..(Ed.)
கலாபூஷணம்
ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்,
சம்மாந்துறை.

வீறுநடை போட்டு வெளிவரும் 'செங்கதிர்' இதழ்கள் கிடை கப் பெற்றேன். இதழ்கள் திருப்திகரமாகவுள்ளன. வாழ்த் துக்கள்.

- செங்கையாழியான்,
75/10A, விறவுன் வீதி, நீராவிய
யாழ்ப்பாண

---

செங்கதிர் வைகாசி மாத இதழ் வாசித்தேன். நான் இதுவரை யும் இந்திய நூல்களையும், சஞ்சிகைகளையுமே வாசிக்கும் பழக்கம் உள்ளவன். நண்பர் K.பொன்னுத்துரை எனக்கு ஈழத்துப் புத்தகங்களை வாசிக்கும்படி தூண்டி, மல்லிகை, ஞானம், செங்கதிர் போன்ற சஞ்சிகைகளைத் தந்து எனக்கு ஈழத்தின் நூல்கள் வாசிப்பதில் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தி விட்டார். எனக்கும் நல்ல திருப்தியாக இருக்கிறது. செங்கதிர் வைகாசி இதழில் இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு ஞாபகார்த்த மலர் கட்டுரை சிறப்பாக இருந்தது, சுவாமி விபுலானந்தர் முஸ்லிம்களின் கல்வியில் காட்டிய கரிசனை பிரமிக்க வைத்தது. 'ஊடகங்களில் இன்று தமிழ்' - சமதியின் கட்டுரை நன்று. 'தேடல்' பகுதியில் 'இங்கிலாந்தில் ஈவெரா வின் சொற்பொழிவு நல்ல ஞாபகமூட்டல். நன்று. 'நான் யார்?'- சரோஜினி குகதாஸ் கட்டுரை பிரமாதம். இப்படியாக எல் லாமே நல்ல அம்சம். தங்களின் முயற்சி வெற்றிபெற வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

S.M.B.M.பாரூக்
62/19, சில்வர்சுமித் ஒழுங்கை,
கொழும்பு

---

'செங்கதிர்' இன் செழுமையும் சுவைத் திரட்சியும் சிந்தைக்கு விருந்தாய் அமைந்தன. சிறப்பம்சங்கள் சில சிலாகிக்கத்தக் கவை. வாழ்த்துக்கள்.

அனலக்தர்
547, பெண் பாடசாலை வீதி,
ஏறாவூர் - 01

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்




திருமண சேவை

Professional ளா?
Academic கா?...



தங்கள் தேடல்
எவ்வகைத்
தொழிலாற்றுபவராக
இருந்தாலும்....

சுய தெரிவு முறை முன்னோடி, தனிநபர் நிறுவனர், மூத்த, புகழ் பூத்த,
சர்வதேச, சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர்,
குரும்பசிட்டியூர், மாயெழு
வேல் அமுதனை நாடுங்கள்!


8-3-3 மெற்றோ மாடிமனை
(வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக, நிலப்பக்கமாக, 33ம் ஒழுங்கை வழி)
55 ஆம் ஒழுங்கை, கொழும்பு - 06.
மேலதிக விபரங்களைத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில்
வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி :
2360488, 2360694, 4873929 இல் விசாரித்தறிக!

சுலபமான தேர்வுக்குச் சுயதெரிவு முறையே! மகோன்னத மணவாழ்வுக்குக்
குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனே!


# "AKARAM"

- Books
- Stationers









**"Aharam"**
82, Bar Road,
Batticaloa.
Tel : 060-264398

ஈழத்து எழுத்தாளர்களது
நூல்கள் யாவும்
ஒரே இடத்தில் கிடைக்கப்பெற

# அகரம்

Sun Printers - 05, Iruthayapuram West, Batticaloa. 065-2222597